



# உதயன்

பக்கங்கள் - 20 | விலை 30 | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111


சுடர் : 35 கதிர் : 312 புரட்டாதி 22 ஆம் நாள் வியாழக்கிழமை 08 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## மூன்றாம் அலை

# கொரோனா 1,087

கொழும்பு, ஒக்ரோபர் 8

கொரோனா மூன்றாம் அலை இலங்கையை வலுவாகவே வதைக்க ஆரம்பித்துள்ளது. நேற்று இரவு 11 மணி வரையிலான நிலவரத்தின்படி ஆயிரத்து 87 பேர் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டனர். நேற்றுமட்டும் 256 பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர். 18



## மகளுக்கு கொரோனா! தாய் திடீரென இறப்பு

### மாதிரி பி.சி.ஆர். பரிசோதனைக்கு

கொழும்பு, ஒக். 8

கம்பஹா மாவட்டம், யக்கலையைச் சேர்ந்த 64 வயது பெண் கலகந்த தனிமைப்படுத்தல் நிலையத்தில் நேற்றுத் திடீரென உயிரிழந்துள்ளார். 18

## கொழும்பு சென்.ஜோசப் கல்லூரி மாணவனின் தாய்க்கு கொரோனா

கொழும்பில் நேற்றுப் பரபரப்பு

கொழும்பு, ஒக். 8

கொழும்பு சென். ஜோசப் கல்லூரியில் கல்விகற்கும் மாணவனின் தாயாராருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள் 18

## மூன்றாம் அலையின் வைரஸ் வீரியமானது

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அவசர எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 8

கம்பஹாவில் கொரோனாத் தொற்றுடன் கண்டறியப்பட்ட பெண்ணுக்கு ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸின் வீரியம் கூடு 18

## காணாமல்போன மகனைத் தேடிய தாய் உயிரிழப்பு

வவுனியா, ஒக். 8



காணாமல்போன மகனைத்தேடிய தாய் சுகவீனம் காரணமாக நேற்று உயிரிழந்தார். வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த பெரியசாமி மனோன்மணி (வயது- 70) என்றவயோதிப்பெண்ணே உயிரிழந்தவராவார்.

இவரது மகன் பெரியசாமி செல்வகுமார் கடந்த 2008ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டிருந்தார். இதையடுத்து கடந்த 12 வருடங்களாகக்குறித்ததாயார் தனது மகனைத் தேடி வந்தார். எனினும் அவரது இறுதி ஆசையும் நிராசையாக்கப்பட்ட நிலையில் சுகவீனம் காரணமாக நேற்று அவர் உயிர் பிரிந்தது. (ம-110)

## கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி தனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 8

கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவருக்கு 18

## 17 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு

கொழும்பு, ஒக். 8

கம்பஹா பொலிஸ் பிரிவிலும் களனி பொலிஸ் பிரிவில் ஜாஎல மற்றும் கந்தான 18

## பரீட்சைகள் திட்டமிடப்பட்ட திகதிகளில் நடைபெறும்!

கல்வி அமைச்சர் பீரிஸ் நேற்று அறிவிப்பு
கம்பஹா பரீட்சார்த்திகளுக்கு விசேட திட்டம்

கொழும்பு, ஒக். 8

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, உயர்தரப் பரீட்சை ஆகியவற்றை திட்டமிடப்பட்ட திகதிகளில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது இவ்வாறு கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார். 18

## தனியார் கல்வி நிலையங்களை வடக்கில் உடனடியாக மூடுங்கள்

கல்வி அமைச்சின் செயலர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 8

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து தனியார் கல்வி நிலையங்கள், சமயப் பாடசாலைகள் மற்றும் பாலர் பாடசாலைகளை இன்று தொடக்கம் தற்காலிகமாக மூடுமாறு வடக்கு கல்வி அமைச்சின் 18

## வன்னி மக்கள் எதிர்கொள்பவை சில்லறைத்தனப் பிரச்சினைகளாம்!

### சபையில் தெரிவித்தார் சபாநாயகர்

கொழும்பு, ஒக். 8

மன்னார், முல்லைத்தீவு, வவுனியாவைச் சேர்ந்த 6 ஆயிரத்து 682 குடும்பங்களின் பிரச்சினைகளைச் 'சில்லறைப் பிரச்சினைகள்' என்று கூறிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இவ்வாறான கேள்விகளைக் கேட்டுப் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் நேரத்தை வீணடிக்க வேண்டாம் எனவும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுநடைபெற்ற பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. 18

## கூட்டமைப்பின் கூட்டத்தில் நேற்றுப் பெரும் குழப்பம்!

### பேச்சாளர் பதவி வெற்றிடமானது

யாழ்ப்பாணம், ஒக். 8

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் பதவி தொடர்பில் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நேற்றும் முடிவெடுக்கப்படவில்லை. அதேவேளை கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியை வகித்து வந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தான் அந்தப் பதவியில் தொடர விரும்பவில்லை என்று தெரிவித்து அந்தப் பதவியைத் துறந்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் 18

# சுகாதாரத் துறையில் தொடரும் 'மாபியா'

யாழ்ப்பாணம், ஒக். 8

**வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு உட்பட்ட மருத்துவமனைகளில் அம்புலன்ஸ்களின் சாரதிகளாகப் பணிபுரிந்து வருவோர் கடந்த மாதம் 22ஆம் திகதியிலிருந்து தொடர் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் அவர்களுக்கான கொடுப்பனவு வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் நிறுத்தப்பட்டுள்ள நிலையிலும், அவர்கள் போராட்டத்தைக் கைவிடவில்லை.**

'நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்' என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சு அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

2019ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் 5 ஆண்டுகள் பணியாற்றிய சாரதிகள் அனைவருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டது. வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட சகல அமைச்சுக்கள், திணைக்களங்களின் கீழ் பணியாற்றியவர்களும் இந்த இடமாற்றத்துக்கு உட்படுத்தப்பட்டனர். இந்த ஆண்டு ஆரம்பத்தில் ஏற்பட்ட கொரோனா இடர் மற்றும் தேர்தல் காரணமாக இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படுவதில் தாமதம் நிலவியது. கடந்த 22ஆம் திகதியிலிருந்து இந்த இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் மருத்துவமனைகளில் அம்புலன்ஸ் சாரதிகளாக கடமையாற்றிய 35 பேர் தம்மை இடமாற்றம் செய்யவேண்டாம் எனக் கோரி கடந்த 22ஆம் திகதியிலிருந்து சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அம்புலன்ஸ் ஓடும் தம்மை வேறு திணைக்களங்கள் வேறு அமைச்சுக்களுக்கு மாற்றக் கூடாது என்றும், தாம் தொடர்ந்து அம்புலன்ஸ் சாரதிகளாகவே பணியாற்றுவோம் எனவும் தெரிவித்து சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஒரு சில அம்புலன்ஸ் சாரதிகள் இடமாற்றத்துக்கு அமைவாக வழங்கப்பட்ட புதிய நிலையங்களில் கடமைகளைப் பொறுப்பேற்ற போதும் ஏனையோரின் வற்புறுத்தல்களால் அவர்களும் இந்தப் போராட்டத்தில் இணைந்துள்ளனர்.



இதேவேளை இவர்களின் இடங்களுக்கு வேறு திணைக்களங்கள், அமைச்சுக்களில் பணியாற்றிய சாரதிகள் இடமாற்றத்துக்கு அமைவாக வந்தபோதும், மருத்துவமனைகளில் உள்ள பொறுப்பு மருத்துவர்கள், அம்புலன்ஸ் சாவியை முன்னைய சாரதிகள் கொண்டு சென்றுள்ளனர் என்றும் சில இடங்களில் பதிலளித்துள்ளனர். இதனால் இரண்டு மருத்துவமனைகளில் புதிதாகச் சென்ற சாரதிகள் அம்புலன்ஸை பொறுப்பேற்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரச சாரதிகள் என்ற சேவை வகுப்பினுள் அம்புலன்ஸ் சாரதிகள் என்ற தனியானதொரு பிரிவு இல்லை என்று வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கம் சுட்டிக்காட்டுகின்றது. சகலரும் சாரதிகள் என்ற அடிப்படையில் சாரதிகளுக்கான இடமாற்றம் சகலருக்கும் பொதுவானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் சாரதிகள் 35 பேரும் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் மற்றும் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். அவர்கள் வடக்கு மாகாண ஆளுநருக்கு, இவர்களை இடமாற்றம் செய்யவேண்டாம் என்று கடிதம் அனுப்பியுள்ளனர். இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர, அம்புலன்ஸ் சாரதிகளை தனியான சேவைப் பிரிவாக அமைச்சரவைத் தீர்மானத்தின் ஊடாக நியமிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டு கடிதம் அனுப்பியுள்ளார்.

இருப்பினும், இடமாற்றங்கள் வடக்கு மாகாண அதிகாரிகளால் நிறுத்தப்படவில்லை. சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சாரதிகளின் மாதாந்த சம்பளம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

சாரதிகள் நியமனம் பெறுவோர் மாகாணத்துக்கு உட்பட்ட எந்தத் திணைக்களத்திலும் பணியாற்றுவோம் எனத் தெரிவித்தே நியமனம் பெறுகின்றனர். உரிய முறையில் இடமாற்றம் வழங்கப்பட்டால் அதனை நடைமுறைப்படுத்த சாரதிகள் ஒத்துழைக்கவேண்டும் என்று அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர். (ஒ,5)

## கட்டுநாயக்க விமானநிலைய பணியாளருக்கும் கொரோனா

கொழும்பு, ஒக். 8

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்ட பெண்ணொருவருக்கு, கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது என, விமான நிலைய சுகாதார மருத்துவ அதிகாரி சந்திக்க பண்டார விக்கிரமசூரிய தெரிவித்தார்.

சிலாபம் பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய பெண்ணே, தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்களை (அத்தியாவசியமற்ற) பணிக்குத் திரும்ப வேண்டாம் என்று முன்னதாக உத்தரவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-ஒ.5)



## ஓட்டுமடத்தில் வீடுபுகுந்து பட்டப்பகலில் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஒக். 8

ஓட்டுமடம் வீதியில் உள்ள வீடொன்றுக்குள் வாள்களுடன் புகுந்த கும்பல் அங்கிருந்த பொருள்களை உடைத்துச் சேதமாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று மதியம் நடந்துள்ளது.

யாழ்ப்பாணம், பெருமாள் கோயில் பகுதியில் அண்மையில் நடந்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வரும் ஆவா குழுவைச் சேர்ந்த சுமன் என்பவரின் வீடே தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

மோட்டார் சைக்கிள்களில் வந்த 4 பேர் வீட்டுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. அதேவேளை, நேற்றுமுன்தினமும் இணுவில் மற்றும் உடுவிலில் உள்ள இரு வீடுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. அந்த வீடுகளும் ஆவா குழுவைச் சேர்ந்தவர்களின் வீடுகள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. (எ-26)

## தூதரக அதிகாரியின் சடலம் வரத் தாமதம்

கிளிநொச்சி, ஒக்.8

இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதரகத்தின் துணை அதிகாரி மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில், அவரின் சடலத்தை இலங்கைக்குக் கொண்டுவருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த கதிரவேற்பிள்ளை யோகநாதனின் சடலமே வரத் தாமதமடைந்துள்ளது. (க-ரி1)

*சட்டவிரோத மணல் அகழ்வு;*

## டிப்பர் வாகனங்களுடன் சாரதிகள் இருவர் கைது

கிளிநொச்சி, ஒக். 8

மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் டிப்பர் வாகனங்களின் சாரதிகள் இருவர் கைது செய்யப்பட்டனர். வாகனங்களும் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. (ம,ஜ-113)

## சுகாதாரத்துறை சாரதிகள் வடக்கில் சுகவீனவிடுப்பு

வவுனியா, ஒக். 8

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் சாரதிகள் சங்கத்தினர் இன்றும் நாளையும், வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் சுகவீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைக்குள் கடமையாற்றிவரும் சாரதிகளை சுகாதாரத் துறைகள் தவிர்ந்த வேறு திணைக்களங்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே சுகவீனவிடுப்பு போராட்டத்தில் ஈடுபடுகின்றோம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 35 வருடங்களாக சுகாதார சேவைகள் தவிர்ந்த வேறு திணைக்களங்களுக்கான இடமாற்றங்கள் எமக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. தற்போது இந்த நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது. நாட்டில் 8 மாகாணங்களில் இல்லாத நடைமுறை வடக்கு மாகாணத்தில் மாத்திரம் கொண்டுவரப்பட்டுள்ளமையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இது தொடர்பாக அனைத்து தரப்பினரிடமும் கோரிக்கை முன்வைத்தபோதும் உரிய தீர்வை எவரும் வழங்கவில்லை. எனவே எமது கோரிக்கையை முன்னிறுத்தி சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபடுகின்றோம்.

மக்களினதும்,நோயாளிகளினதும் நலன்கருதி அம்புலன்ஸ் வாகன சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகளில் ஈடுபடும் சாரதிகள் குறித்த சுகவீனவிடுப்பில் ஈடுபடவுள்ளனர் என்று சங்கத்தினர் மேலும் தெரிவித்தனர். (த-110)

## மரக்குற்றிகள் கடத்தல் இராணுவத்தால் முறியடிப்பு

வவுனியா, ஒக். 8

வவுனியா கல்மடுவில் நேற்றுமுன்தினம் இரவு சட்டவிரோதமாக கடத்த முற்பட்ட முதிரை மரக்குற்றிகளை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

வவுனியா பூவரசங்குளம் பகுதி இராணுவத்தினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா கல்மடு பகுதியிலிருந்து வவுனியா நோக்கி கடத்தப்படவிருந்த பத்து இலட்சம் பெறுமதியான 12 முதிரை மரக்குற்றிகளே பட்டா ரக வாகனத்துடன் கைப்பற்றப்பட்டன. அவை பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தப்பியோடியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-110)

# அத்தியாவசியப் பொருள்கள் நேரடியாக வீடுகளுக்கு!

## யாழ். வணிகர் கழகம் ஏற்பாடு

**யாழ்ப்பாணம், ஒக்.8**

**யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் தங்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு, யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

மக்கள் கேட்கும் பொருள்களை அவர்களுடைய வீடுகளுக்கே நேரடியாகச் சென்று வழங்குவதற்கு வர்த்தகர்கள் தயாராகியுள்ளனர் என்று யாழ்ப்பாண வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

கொரோனா தொடர்பான அச்சம் தற்போது ஏற்பட்டுள்ளதால், கடந்த கொரோனா காலத்தில் யாழ்.வணிகர் கழகம் முன்னெடுத்த வீடுகளுக்குப் பொருள்களை விநியோகிக்கும் செயற்பாட்டை தற்போதும் முன்னெடுக்க ஆயத்தமாகியுள்ளது.

எனவே பொதுமக்கள் கடைகளில் முண்டியடிப்பதைத் தவிர்த்து, அறிவிக்கப்படும் வர்த்தக நிலையங்களுடன் தொடர்புகொண்டால் பொருள்கள் வீடு தேடி வரும், அத்தோடு யாழ்.நகருக்கு அப்பாற்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தகர்களுடன் தொடர்புகொண்டு இந்த நடைமுறையை அங்குள்ள மக்கள் பெற்றுக்கொள்ளும் வகையிலும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

மக்கள் கடைகளுக்குச் செல்லும்போது, முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பின்பற்றுதல் போன்ற சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (ப)





# தொல்லியல் திணைக்களத்தில் கிருமித் தொற்று நீக்கி விசிறல்

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ்ப்பாணம் தொல்லியல் திணைக்களத்தில் கிருமித் தொற்றுநீக்கி விசிறப்பட்டது.

யாழ்ப்பாணமாநகரசபை பொது சுகாதாரப் பிரிவினரால், தொற்று நீக்கி விசிறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் தொல்லியல் திணைக்களத்தில் பணியாற்றும் பெண் ஒருவரின் தாய், மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிவரும் நிலையில், அவர் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியிருந்தார்.

தொல்பொருள் திணைக்களத்தின் நூதனசாலையில் பணியாற்றும் பெண்ணும், யாழ்ப்பாணம் கோட்டையில் பணியாற்றும் அவரது நண்பரும்கடந்த சில நாள்களுக்கு முன்னரே கம்பஹாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தனர். அதனையடுத்து அவர்கள் கட்டாயத் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் தொல்லியல் திணைக்களத்தின் ஏனைய பணியாளர்கள், தத்தமது வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் இருக்குமாறு சுகாதார பிரிவினரால் வேண்டப் பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நூதனசாலையில் கிருமித் தொற்றுநீக்கிவிசுறும்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (க-111)

# ரியூடறிகளுக்கு மீளவும் பூட்டு

வவுனியா,ஒக்.8

வவுனியாவில் இயங்கி வரும் தனியார் கல்வி நிலையங்களை மறு அறிவித்தல் வரும் வரை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா தாக்கம் இனங்காணப் பட்டுள்ளதையடுத்து, பல்வேறு மாவட்டங்களிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதனையடுத்து வவுனியாவில் செயற்படும் தனியார் கல்வி நிலையங்களைத் தற்காலிகமாக மறுஅறிவித்தல் வரும் வரை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(க-18-110)

# யாழில் தேவையான பொருள்கள் இருப்பில்

## மக்கள் முண்டியடிக்க வேண்டாம்

யாழ்ப்பாணம், ஒக்.8

யாழ்ப்பாணம் மரவட்ட மக்களுக்குத் தேவையான பொருள்கள் வர்த்தக நிலையங்களில் உள்ளமையால், மக்கள் கடைகளில் முண்டியடிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று யாழ்ப்பாண வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண வணிகர் கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட கழகத்தின் தலைவர் எஸ். ஜெயசேகரம் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனா அச்சம் வடக்கிலும் பூதாகரமாகியுள்ளதால், தங்களுக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் கடைகளில் முண்டியடிக்கின்றனர்.

மக்களுக்குத் தேவையான பொருள்கள் வர்த்தக நிலையங்களில் இருப்பில் உள்ளன.

அதை விட கொழும்பில் இருந்தும் பொருள்கள் வருகின்றன. எனவே கொரோனாவால் முடக்க நிலை ஏற்பட்டால், மக்களுக்குப் பொருள்களை தட்டுப்பாடு இன்றி வழங்க யாழ்ப்பாணம் வர்த்தகர்கள் தயாராகவே உள்ளனர். மாவட்டச் செயலரிடம் விசேட அனுமதியைப் பெற்றாவது, தேவையான பொருள்களைக் கொண்டு வருவோம். எனவே மக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை.-என்றார்.

அதேவேளை கடந்த கொரோனா காலத்தில் செய்தது போன்று இம்முறை பொருள்களை அதிகமாக வாங்கி, பழுதடைய வைக்காதீர்கள் என்று அவர் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

(ப)

# மது விற்பனை: பெண் கைது

கிளிநொச்சி,ஒக்.8



135 மதுபானப் போத்தல்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் குடும்பப் பெண் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி கட்டைக் காட்டில், பெண் ஒருவரால் மதுபானம் விற்பனை செய்யப்படுகிறது என்று தருமபுரம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

அங்கு விரைந்த பொலிஸார் மதுபானப் போத்தல்களைக் கைப்பற்றினர்.

அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் குடும்பப் பெண்ணைக் கைது செய்தனர். (க-113)

# மன்னார் கலாசார நிலையத்துக்கு தனியாரின் காணி ஒதுக்கம்

## இராஜாங்க அமைச்சர் விதுர தெரிவிப்பு

மன்னார்,ஒக்.8

மன்னார் தாழ்வுபாடு பிரதேசத்தில் போரால் சேதமடைந்துள்ள, கலாசார நிலையத்தை புனரமைக்க 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ள போதும், அந்த நிலையம் அமைந்துள்ள காணி தனியாருக்குச் சொந்தமானது என்பதனால் பணியை முன்னெடுக்க முடியாதுள்ளது.

இவ்வாறு புத்தசாசன சமய மற்றும் கலாசார இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே, இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க இவ்வாறு பதிலளித்தார்.

இதன்போது விளக்கமளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், "காணியின் உறுதிப்பத்திரம் கலாசார நிலையத்தின் பெயருக்கு மாற்றப்பட்டு விட்டது" எனக் கூறினார். இதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, "அரசின் புதிய சுற்றுநிருபமொன்றின் படி எதிர்வரும் 3 வருடங்களுக்கு அரசால் புதிய கட்டடங்கள் எதுவும் கட்ட முடியாது. எனினும், மாற்று வழி ஒன்றைத் தேடுவோம்" என்றார்.

வன்னியில் உள்ள தொல்பொருள் திணைக்களத்தினர் இன, மத ரீதியாகச் செயற்படுகின்றனர். கூட்டங்களில் பங்கேற்க அவர்கள் மறுக்கின்றனர் எனவும் சாள்ஸ் நிர்மலநாதன் கூறியபோது, "புத்தசாசன சமய மற்றும் கலாசார அமைச்சின் கீழ் தொல்பொருள் திணைக்களம் இல்லை. எனினும், அரச திணைக்களமொன்று இன, மத ரீதியாகச் செயற்பட முடியாது" என்று அமைச்சர் பதிலளித்தார்.

(க-22)

# வனவளத் திணைக்களத்தின் காணி அபகரிப்பு முறியடிப்பு

கிளிநொச்சி, ஒக். 8

**பரந்தன் உமையாள்புரம் பகுதியில் வனவளத் திணைக்களம் அடாத்தாக காணிகளை எல்லையிடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த நிலையில் அது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது**

344 ஏக்கர் காணிகளையே வன வளத் திணைக்களம் சுவீகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டது. மயானம், நெல்காயவிடும் தளம், பொதுமக்க ளின் வீடுகள் வயல்கள் உள்ளடங் கலாக உள்ள காணிகளையே அபகரிக்க முயற்சித்துள்ளனர். இவற்றுக்கான காணி அனுமதிப்பத் திரங்கள் மக்களிடம் உள்ளன. 30 வருடங்களாக வயல்களை விதைத்து வருகின்றனர். தொடர்ந்தும் வயல் விதைப்பில் ஈடுபட்டால் கைதுசெய்யப்படுவீர்கள் என்று வனவளத் திணைக்களத்தி னர் மக்களை எச்சரித்திருந்தனர். இந்த நிலையில் காணிகளை எல் லையிட்டு அபகரிக்கும் முயற்சியில் நேற்று வனவளத் திணைக்களம் ஈடுபட்டபோது பொதுமக்கள் ஒன்று திரண்டு எதிர்ப்பு வெளியிட் டனர். இதனையடுத்து வனவளத் திணைக் களம் தனது முயற்சியிலிருந்து பின்வாங்கியது. (ஓ.5,6)

# அனைத்து எம்.பிக்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை

ஹரின் பெர்னாண்டோ யோசனை

கொழும்பு, ஒக். 8

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிசி ஆர் பரிசோதனை மேற்கொள்வதற்கான ஏற்பாடு களை செய்யுங்கள் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ கோரிக்கை விடுத்தார்.

ஹரின் பெர்னாண்டோ தன்னை பிசிஆர் பரிசோத னைக்கு உட்படுத்திக்கொண்டமை தொடர்பில் சபை யில் நேற்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பின ரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: நாட்டில் இடம்பெறும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையில் எனக்கு அதிருப்தி இல்லை. நேற்று முன்தினம்கூட 900 பரிசோதனைகள்தான் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

ஆளுங்கட்சியில் உள்ளவர்கள் பி.சி.ஆர். பரிசோத னைக்கு முன்வரவில்லை. இந்நிலையில் நான் முன் வந்து. அந்த பரிசோதனைகளை செய்துள்ளேன். இந்தப் பரிசோதனை வலிக்காது என்ற தகவலை மக்களுக்கு வழங்கியுள்ளேன். தேவையென்றால் கேள்வி எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினருக்கு பரிசோதனை அறிக்கையின் முடிவையும் அனுப்பு கின்றேன்.

நாட்டில் தற்போது தனியார் மருத்துவமனைகளிலும் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. இது பெரும்பாலானவர்களுக்கு தெரிவதில்லை. அரச மருத்துவமனைகளில் மட்டுமே பிசிஆர் பரிசோதனை நடக்கின்றது என நினைத்துக்கொண்டிருக்கின்ற னர். அவ்வாறு இல்லை. தனியார் மருத்துவமனைக ளில் மேற்கொள்ளப்படுகின்றது. வீடுகளுக்கே வந்து மாதிரிகளைப் பெறுகின்றனர். அதற்கு கட்டணம் செலுத்தவேண்டும்-என்றார். (ஓ.5,44)

# முகக்கவசம் அணியாதவர்கள் கட்டாய தனிமைப்படுத்தலில்!

சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 8

நாட்டில் கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் நிலைமை ஏற்பட்டுள்ளதால் மக்கள் வீடுகளிலிருந்து வெளியே வரும் போது முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. முகக் கவசம் அணியாது பொது இடங்களில் நடமாடுபவர் கள் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவரர்கள் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (ஓ.5,22)

# ஹரினால் நாடாளுமன்றில் பெரும் பரபரப்பு

கொழும்பு, ஒக். 8

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர் னான்டோ அவசர அவசரமாக பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொண்டுள் ளமை தொடர்பில் ஆளுங்கட்சி நாடாளு மன்ற உறுப்பினர் பிரேமநாத் சீ. தொல வத்த சபையில் கேள்வி எழுப்பினார்.

'கொரோனா தொற்றுக்கான அறிகுறி கள் இருப்பவர்களே பி.சி.ஆர். பரிசோ தனை மேற்கொள்வார்கள். இந்நிலை யில் ஹரின் பெர்ணான்டோவும் பரிசோ தனை மேற்கொண்டுள்ளார். சபைக்கும் வந்துசென்றுள்ளார். பிசிஆர் பரிசோ தனை மேற்கொண்டமைக்கான காரணத்தை அவர் அறிவிக்க வேண்டும்' என்று அவர் வலியு றுத்தினார்.

பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகளை தன்னிடம் இருந்து பெறும் காணொலியை ஹரின் பெர்னான்டோ நேற்று முன்தி னம் சமூகவலைத்தளத்தில் பதி விட்டுள் ளார்.

இதனை அடிப்படையாகக் கொண்டே நாடாளுமன்றத்தில் பிரேமநாத் சீ. தொலவத்த மேற் கண்டவாறு கேள்வி எழுப்பி னார். (ஓ.5,44)



# 8 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஒக். 8



மினுவாங்கொட பகுதியைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தல் நிலையங் களுக்கு அனுப்பப்பட்டுள்ள னர் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித் துள்ளார்.

இவர்கள் 80 தனிமைப்படுத் தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ.5)

# ஊழியர் இழப்பீட்டு சட்டவரைவில் திருத்தங்கள்

கொழும்பு, ஒக்.8

ஊழியர் இழப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளைத் திருத்தியமைக்கும் வகையில் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட சட்டவரைபில் ஊழியர் நலனை உறுதிசெய்யும் வகையிலான மேலும் பல திருத்தங்களைச் செய்வதற்கு அரசாங்கம் தீர்மா னித்துள்ளது.

ஊழியர் இழப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் உறுப்பு ரையின் கீழ் ஊழியர் ஒருவருக்கு விபத்து ஏற்படும் போது, தொழில் வழங்குநரால் இழப்பீட்டு ஆணையாளருக்கு இழப் பீட்டுக்கூற்று சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தற்போதுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் விதிக்கப்படும் 1000 ரூபா குற்றப்ப ணத்தொகையை அதிகரித்தல் மற்றும் இழப்பீட்டு அளவுகளை எடுத்துக்காட்டும் ஊழியர் இழப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் துணை ஆவணத்தில் சமகாலத்திற்கு ஏற்றவகையிலான மாற்றங்களை ஏற்படுத்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்படி சட்டவரைவு மேலும் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (ந-இ)

# தொற்று ஏற்பட்டது எப்படி?

கண்டறிவதற்கான முயற்சிகள் தீவிரம்

கொழும்பு, ஒக். 8

மினுவாங்கொட ஆடைத் தொழிற் சாலையின் ஊழியர்கள் எவ் வாறு கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ப தைக் கண்டறிவதற்கான முயற் சிகள் தீவிரமாக முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

கடந்த மாதம் 25ஆம் மற்றும் 26ஆம் திகதிகளில் தொழிற்சா லையின் ஊழியர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் விசார ணையாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது. 25ஆம் திகதி கட்டுநா யக்க விமான நிலைய கார்டன் ஹோட்டலில் நடைபெற்ற விருந் தில், தொழிற்சாலையின் 39 நிர்வாகிகள் பங்கேற்றனர். அவர்களில் 8 பேருக்கு கொரோ னாத் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

ஹோட்டலுக்கு விமான நிறுவ னங்களின் ஊழியர்கள் தனி மைப்படுத்தலுக்காக வருவார் கள் என்று கூறப்படுகிறது. இந்த ஹொட்டலில் நடைபெற்ற விருந்தில் கலந்துகொண்ட ஆடைத் தொழிற்சாலையின் நிர்வாக தர அதிகாரி மூலம் இந்த வைரஸ் பரவியதா என்று விசாரணை நடந்து வருகிறது.

மேலும் 26 ஆம் திகதி தொழிற் சாலையில் மற்றொரு விருந்து நடைபெற்றது. இதில் ஒரு பிர பலமான இசைக்குழுவும் கலந்து கொண்டது. இசைக் குழுவின் 13 உறுப்பினர்கள் தொழிற்சா லைக்குள் வந்துள்ளனர். அவர் கள் மூலம் வைரஸ் பரவியதா என்ற மற்றொரு சந்தேகமும் எழுந்துள்ளது. (ஓ.5)



## யாழ்.நெடுந்தூர பஸ் நிலையம் நவம்பரில் மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம்,ஒக்.8

நெடுந்தூர (நகரங்களுக்கிடையிலான) பஸ் நிலையத்தின் வேலைத் திட்டங்கள் முடிவுறும் நிலையை எட்டியுள்ளது. அடுத்த மாதமளவில் நிலையத்தை மக்கள் பாவனைக்கு கையளிப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று யாழ்ப்பாண மாநகர சபை ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸ் நிலையத்தை திறப்பதற்கான இறுதி ஏற்பாடுகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வட மாகாண பணிப்பாளர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாண மாநகர ஆணையாளர், யாழ்ப்பாண மாநகர பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள், இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர்கள், இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலக அதிகாரிகள், பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# சுகாதார நடைமுறைகளுக்கமைய பயணங்களை மேற்கொள்ளவும்

## மன்னார் மாவட்ட பதில் செயலர் குணபாலன் அறிவுறுத்தல்



மன்னார்,ஒக்.8

மன்னார் மாவட்ட மக்கள் முகக்கவசம் அணிந்து உரிய சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக தமது பயணங்களை மேற்கொள்ள வேண்டும் என்று மன்னார் மாவட்ட பதில் மாவட்டச் செயலர் எஸ்.குணபாலன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட அரச மற்றும் தனியார் போக்குவரத்து சேவை பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது.

இதன்போது நேர மாற்றம் மற்றும் கொரோனாத் தொற்று தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலின் பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனா தொடர்பான விழிப்புணர்வு மிக முக்கியமாக காணப்படுகின்றது. கொரோனாத் தொற்று தற்போது போக்குவரத்தினூடாகவும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் போக்குவரத்து சேவையை மேற்கொள்ளுகின்றவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

சுகாதார அமைச்சால் மேற்கொள்ளப்பட்டுள்ள வழிகாட்டல்கள் போக்குவரத்து துறையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

பயணிகள் முகக் கவசம் அணிந்து சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக பயணங்களை மேற்கொள்ள வேண்டும். பாடசாலைகள் அனைத்துக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்கள் இயங்குகின்றன என எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனவே மன்னார் மாவட்டத்தில் இயங்கி வரும் அனைத்து தனியார் கல்வி நிலையங்களும் மறுஅறிவித்தல் வரை மூடப்பட வேண்டும். பொதுமக்கள் ஒன்றுகூடுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். நேர மாற்றம் தொடர்பாக மன்னார் மாவட்டதனியார் மற்றும் இலங்கை அரச போக்குவரத்து சேவை பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டோம். எனினும் முறையான தீர்வு எட்டப்படவில்லை.

கலந்து கொண்ட இலங்கை அரச போக்குவரத்து சேவை பிரதிநிதிகள் தாங்கள் எந்தவித தயார்படுத்தலும் இல்லாமல் வருகை தந்தனர் என தெரிவித்தனர். இந்த நிலையில் அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் திகதி குறித்த கூட்டம் மீண்டும் இடம்பெற உள்ளது. அதன் பின்னர் கூட்டத்தைக் கூடி தீர்மானம் மேற்கொள்ளப்பட உள்ளது.

கொரோனா அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

எனவே மக்களின் அச்ச நிலையை தனித்து சுமுகமான ஒரு நிலையை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று இராணுவம், பொலிஸ் மற்றும் கடற்படை அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைத்துள்ளோம் - என்றார். (ஐ-56.213)



## கிராமசக்தி நிகழ்ச்சித்திட்ட முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம்

கிளிநொச்சி,ஒக்.8

கிராமசக்தி நிகழ்ச்சித்திட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

2018 மற்றும் 2019 ஆண்டுகளில் 4 பிரதேச செயலர் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட கிராமசக்தி சங்கங்களின் செயற்பாடுகள் மற்றும் அவ்வாறு உருவாக்கப்பட்ட சங்கங்களின் தற்போதைய நிலை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் தலைமையில் நடைபெற்ற இந்த மீளாய்வுக் கூட்டத்தில் மேலதிக செயலர், திட்டமிடல் பணிப்பாளர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-222)



முல்லைத்தீவு குமரபுரம் பகுதியில் வறுமையில் உள்ள குடும்பம் ஒன்றுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா செலவில் குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டது.

சுசீலன் பௌண்டேசன் சிறுவர் வறுமை நிவாரண நிதியத்தின் ஊடாக இதற்கான நிதி வழங்கப்பட்டது. (ஐ-222)

## குடி தண்ணீர் விநியோக தடையை நீக்கவும்

மன்னார்,ஒக்.8

வீதிகளில் வைத்து கொல்கலன்களில் குடிதண்ணீர் விற்பனை செய்யப்படுவது தடை செய்யப்பட்டுள்ளதால் உதவிகள் இன்றி வீடுகளில் இருக்கும் வயது வந்தோர் மற்றும் அரச ஊழியர்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் சிரமம் அடைகின்றனர் எனக் கவலை தெரிவித்தனர்.

மன்னார் பகுதியில் சுகாதார நலன் கருதி வீடு வீடாகச் சென்று கொள்கலன்களில் குடிதண்ணீர் விநியோகம் செய்ய சுகாதார திணைக்களத்தால் தடை செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது கொரோனா அச்சுறுத்தல் நிலவத் தொடங்கியதைத்தொடர்ந்து வெளியில் நடமாட பலர் அச்சம் கொண்டுள்ளனர்.

இவ்வேளையில் பொது மக்களின் நலன் கருதி நடமாடும் குடிதண்ணீர் விநியோகத் தடையை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று வாடிக்கையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ-60)

ராசி அதிர்ஷ்டம்


வெற்றி வெற்றி வெற்றி வெற்றி வெற்றி
வெற்றி வெற்றி வெற்றி வெற்றி
வெற்றி வெற்றி வெற்றி
வெற்றி வெற்றி
வெற்றிக்கு மேல்
வெற்றி



அக்டோபர் 05 புறக்கோட்டையில் சுப்பர் ஜக்பொட் வென்றவர் உட்பட
ஜூலை, ஆகஸ்ட், செப்டெம்பர் மற்றும் அக்டோபர் மாதகாலத்தினுள் DLB ராசி அதிர்ஷ்டத்தில்
சுப்பர் ஜக்பொட் வென்றவர்களின் எண்ணிக்கை 18...

அபிவிருத்தி லொத்தர் சபை | நிதி அமைச்சு | www.dlb.lk

Holmes Pollard & Stott



கிளிநொச்சியில்

## குளவி,தேன் கூடுகளால் பொதுமக்கள் சிரமம்

கிளிநொச்சி, ஒக்.8

கிளிநொச்சி நகரத்தில் பொதுமக்கள் சேவை பெறும் அரச திணைக்களங்களில் குளவிகள் மற்றும் தேனீக்கள் கூடுகளைக் கட்டிக் குடிகொள்வதால், அங்கு சேவைகளைப் பெறச் செல்கின்ற பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரப்பகுதியில்உள்ளஅரசதிணைக்களங்கள், பாடசாலைகள், நீர்த்தாங்கிகள் போன்றவற்றில் குளவிகள் மற்றும் தேனீக்கள் அடிக்கடி கூடுகளைக் கட்டி குடிகொள்கின்றன. இவ்வாறான நிலையில் வனஜீவராசிகள் திணைக்களம் அந்தக் கூடுகளை அகற்றி வந்துள்ளது. எனினும் தற்போது பொதுமக்கள் சேவையைப் பெறுகின்ற முக்கிய திணைக்களம் ஒன்றில் தேன் கூடு அமைந்துள்ளது. இதனால் அது எச்சந்தர்ப்பத்திலும் கலைந்து, அதிலிருந்து வெளிவரும் தேனீக்கள், பொதுமக்கள், உத்தியோகத்தர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய நிலையில் உள்ளன என்று மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

எனவே அந்த தேன் கூட்டை அகற்றுவதற்கு வன ஜீவராசிகள் திணைக் களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஐ-ரி2)

சாவகச்சேரி பிரதேசத்தில்

# டெங்கு பரவல் தொடர்பில் தீவிர நடவடிக்கை அவசியம்

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஒக்.8

**சாவகச்சேரி பகுதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் அங்கு டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையை தீவிரப்படுத்துமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.**

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கொரோனா ஒழிப்பு செயலணி கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; தற்போது கொரோனா சமூகத் தொற்று தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. எனினும் மழை காலம் தற்போது ஆரம்பித்துள்ளதால் டெங்கு தொடர்பிலும் அதிக அக்கறைசெலுத்த வேண்டியுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாவுடன், டெங்குத் தொற்றும் அதிகரிக்குமாயின் யாழ்.மாவட்டம் பெரியளவில் அபாய மாவட்டமாக மாறும் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் டெங்குத் தொற்றால் பாதிக்கும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகின்றது.

கொரோனாத் தொற்று தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாது டெங்கு ஒழிப்பு தொடர்பிலும் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. எனவே சாவகச்சேரி பொது மருத்துவ அதிகாரி, பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலர் குறித்த விடயம் தொடர்பில் உடனடியாக டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த முன்வரவேண்டும் - என்றார். (ஐ-111)

## புனர்வாழ்வு பெற்ற இருவர் குடும்பத்துடன் இணைவு

மன்னார்,ஒக்.8

மன்னார் எருக்கலம்பிட்டியில் அமைந்துள்ள புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்ற இருவரை குடும்பத்தினர் மற்றும் சமூகத்துடன் இணைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்தில் போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் விதத்தில் சமூக சீர்திருத்த அமைப்பு ஒன்று அமைக்கப்பட்டது.

இந்த அமைப்பால் 'போதையற்ற புதிய கிராமத்தை உருவாக்குவோம்' என்னும் தொனிப் பொருளில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டத்தின் அடிப்படையில் 9 நபர்கள் இணைக்கப்பட்டு புனர்வாழ்வு வழங்கப்பட்டது.

இவர்களில் இருவர் புனர்வாழ்வு மையத்தில் இருந்து உத்தியோகபூர்வமாக மருத்துவ பிரிசோதனையின் பின்னர் சமூகத்துடன் இணைக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-56)

## புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பங்கோரல்

சாவகச்சேரி,ஒக்.9

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அலகினர், இந்த வருடத்துக்கான, சமுர்த்தி சிப்தொற புலமைப் பரிசில் திட்டத்துக்கு, மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளனர்.

விண்ணப்பங்களை பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலரிடம் பெற்று பூர்த்தி செய்து, எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலரிடம் ஒப்படைக்குமாறு, பிரதேச சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் இ. அன்ரனி அறிவித்துள்ளார்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால், வருடாந்தம் சமுர்த்தி பயனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த, 2019 க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெற்று, க.பொ.த.உயர் தர வகுப்புகளில் கற்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். (க-9)

## சுகாதார நடைமுறைகளை அனைவரும் பின்பற்றவும்

கிளிநொச்சி மாவட்டச் செயலர் அறிவிப்பு

கிளிநொச்சி,ஓக்.8

கொரோனா பாதுகாப்பு சுகாதார நடைமுறைகளை பொதுமக்கள் கண்டிப்பாக பின்பற்றி நோய்த் தொற்றிலிருந்து தங்களையும், சமூகத்தையும் பாதுகாக்குமாறு கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; 'நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றுக் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதோடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் 18 மாணவர்களும், கண்டாவளை வெளிக்கண்டல் இராணுவ முகாமில் 3 இராணுவத்தினரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் தொற்று ஏற்பட்டுள்ளவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என்ற அடிப்படையில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை. அனைவரும் தொடர்ந்தும் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்து முகக் கவசங்களை அணிந்து கொரோனாத் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்த முன்வரவேண்டும் - என்றார்.(ஐ-6,ரி)

பிரமந்தனாறு குளக்கட்டு

## சேதங்கள் தொடர்பில் நேற்றுக் களப்பயணம்

கண்டாவளை,ஒக்.8

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரமந்தனாறு குளக்கட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள சேதங்கள் தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு, நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் பாதுகாப்புப் படை அலுவலர்கள் ஆகியோர் இணைந்து களப் பயணத்தை நேற்று மேற்கொண்டனர். இதன் பிரகாரம் கண்டாவளை பிரதேச செயலகம்,கமநல சேவை நிலையம், பிரமந்தனாறு விவசாய அமைப்புக்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி குறித்த பகுதியில் துப்புரவுப் பணிகளை முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-222)



## போதைப்பொருள் உள்ளீடுகளுடன் வெற்றிலை, பாக்கு விற்பனை

சந்தேகத்தில் ஒருவர் கைது

சுன்னாகம்,ஒக்.8

போதைப்பொருள் உள்ளீடுகளைப் பயன்படுத்தி வெற்றிலை, பாக்கு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வியாபாரி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் மயிலங்காடு பிரதேசத்தில் வைத்து யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இவர் கைதுசெய்யப்பட்டார்.

ஊரெழு, சுன்னாகம் மற்றும் மயிலங்காடு ஆகிய பிரதேசங்களில் கஞ்சா மற்றும் சாதா போன்ற போதைப்பொருள் உள்ளீடுகளுடன் வெற்றிலை பாக்கு விற்பனை செய்யப்படுவதாக அப்பகுதி மக்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ-159)

## கொரோனா அவமானமல்ல!

கொரோனாத் தொற்றுஉறுதி செய்யப்பட்ட நபரொருவர் ராகம மருத்துவமனையில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு தப்பித்தோடியிருந்தார். கிட்டத்தட்ட 18 மணித்தியாலங்களுக்குப் பின்னர் அவர் கொழும்பு கோட்டைப் பகுதியில் வைத்து நேற்றுமாலை பிடிக்கப்பட்டு மீண்டும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த நபர் 14 நாள்களுக்கு மேல் தன்னைத் தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்கப்போகின்றார்கள் என்ற காரணத்துக்காக மட்டும் தப்பித்தோடவில்லை. தனக்கு கொரோனா இருப்பது மற்றவர்களுக்குத் தெரியவருமாயின் அது தனக்கும் தன் குடும்பத்துக்கும் அவமானம் என்று எண்ணியே தப்பித்தேன் என்று சொல்லியுள்ளார். இதேபோன்று 'கொரோனா ஏற்படுவது அவமானகரமானது' என்ற எண்ணம் பலருக்கும் உண்டு.

கொரோனா என்பது தனிமனிதத் தவறாலோ அல்லது தவறான நடத்தைகளாலோ ஏற்படும் தொற்றல்ல. மாறாக ஏதும் அறியாதவர்களைக்கூட கொரோனா பதுங்கியிருந்து தாக்கும். அத்தோடு இலங்கையைப் பொறுத்தவரை கொரோனா என்பது மாற்றமுடியாத ஒரு நோயாக இல்லை. ஏறக்குறைய மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று மீண்டும் தங்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்பியுள்ளனர். அவர்களில் வெறும் 13 பேர் மாத்திரமே கொரோனாவால் உயிரிழக்க நேர்ந்தது. மற்றைய நாடுகளில் எல்லாம் சாவுகளின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் ஏற்பட இலங்கை மிகச் சொற்பமான உயிரிழப்பை மாத்திரமே சந்தித்தது. அதிலும்கூட ஏனைய நோய்த்தாக்கங்களின் விளைவாகவே இந்தச் சாவுகள் சம்பவித்தன. எனவே இலங்கையைப் பொறுத்தவரை இதுவரையும் கொரோனா என்பது வெறும் தொற்றுநோயாக மாத்திரம் இருக்கின்றதே தவிர ஓர் உயிர்கொல்லி நோயாக இன்னும் விஸ்வரூபம் எடுக்கவில்லை. அதற்காக அது ஒன்றும் அப்பாவி நோயும் அல்ல. தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளும், சிகிச்சை முறைகளும், தனிமைப்படுத்தலும் இத்தகைய நிலையை ஏற்படுத்தியிருந்தன.

எனவே இலங்கையைப் பொறுத்தவரை கொரோனா வந்துவிட்டால் சாவு நெருங்கிவிட்டது என்ற அர்த்தம் கிடையாது. அத்தோடு எய்ட்ஸ் என்ற உயிர்கொல்லி நோயைப்போல தகாத உறவு முறைகளால் தொற்றக்கூடிய நோய் அல்ல என்பதால் கொரோனா வருவது அவமானத்தின் அடையாளம் என்று எண்ணுவதோ, மற்றவர்கள் தங்களை ஒதுக்கிவைத்து விடுவார்கள் என்று கருதுவதோ தவறானது. கொரோனா நோயால் பீடிக்கப்பட்டவர்கள் அந்த நோய்ப்பரம்பல் சமூகத்துக்குள் நுழையக்கூடாது என்ற ஒற்றைக் காரணத்துக்காக மாத்திரமே தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். மாறாக கொரோனா வந்துவிட்டால் அவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்ற எண்ணத்தில் அப்படிச் செய்வது கிடையாது. தனிமனிதனால் ஒட்டுமொத்த சமூகமும் பாதிப்புறுவதைத் தவிர்க்க அவர் தனிமைப்படுத்தப்படுவது ஏறக்குறைய ஒரு தியாகச் செயலே. ஆகவே தான் தனிமைப்படுதலின் ஊடாக சமூகத்தைக் காப்பதை நினைத்து அவர் பெருமைப்பட வேண்டுமேதவிர ராகமவில் தப்பித்தோடிய முதியவரைப் போல கொரோனாவையும் தனிமைப்படுத்தலையும் அவமானச் சின்னங்களாக நினைக்கத் தேவையில்லை.

எனவே கொரோனாத் தொற்றாளிகளோடு பழகியவர்கள் ஒடியொளிவதைத் தவிர்த்து தாமாகவே முன்வந்து தங்கள் விவரங்களை உரிய அதிகாரிகளிடம் தெரியப்படுத்தி அதற்குரிய சிகிச்சையைப் பெறவேண்டும். அல்லது தம்மைத் தனிமைத்தடுத்தலுக்கு உள்ளாக்குதல் வேண்டும். அதன்மூலம் தங்களைச் சூழவுள்ளவர்களை காக்கும் நபர்களாக அவர்கள் சமூகத்தில் உயர்ந்து நோக்கப்படுவார்கள்.

# அடுத்த வருடத்துக்குள் வடக்கில் 6,682 வீடுகள்

## பிரதமர் தெரிவிப்பு

**கொழும்பு,ஒக்.8**

**வடக்கில் மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களுக்கான 6 ஆயிரத்து 682 வீடுகளைக் கொண்ட வீட்டுத்திட்டம், அடுத்த ஆண்டு பூர்த்தியாகும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**



இந்த வேலைத்திட்டத்தை அரசு, முழுமைப்படுத்தி வழங்கும் எனவும் அவர் வாக்குறுதியளித்தார்.


நாடாளுமன்றில் கேள்வி நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்குப் பதில் கூறுகையிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் 2 ஆயிரத்து 987 மில்லியன் ரூபா செலவில், 6 ஆயிரத்து 682 வீடுகளை நிர்மாணிக்க தீர்மானிக்கப்பட்டபோதும், அது இடைநடுவே கைவிடப்பட்டது.

இவ்வாறாகக் கைவிடப்பட்ட வீட்டுத்திட்டத்தை புதிய அரசு முன்னெடுக்குமா? என்று சாள்ஸ் எம்.பி. சபையில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பிரதமர் பதில் கூறுகையில், இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு சில கால தாமதம் ஏற்பட்டுள்ளது எனப் பிரதமர் பதிலளித்தார்.

2018ஆம் ஆண்டில் வீடுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 2019 ஆம் ஆண்டுக்கும், 2019ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 2020ஆம் ஆண்டுக்கும் என்ற அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்த வேலைத்திட்டம் 2021 ஆம் ஆண்டில் முழுமையாகப் பூர்த்தியாகும் என்றும் பிரதமர் தெரிவித்தார். (க-22)



போர்க் காலத்தில் உயிரைக் காப்பாற்ற, அனலைதீவு மேற்குக் கரையிலிருந்து, படகுமூலம் தப்பிச் செல்கையில், நடுக்கடலில் படகு கவிழ்ந்ததில் அதில் பயணித்த 69 பேர் உயிரிழந்தனர். அவர்களது 30 ஆவது நினைவு தினம் படகு புறப்பட்டுச் சென்ற இடத்தில், கிராம மக்களால் சுடரேற்றி மலர் தூவி அஞ்சல் செலுத்தப்பட்டது. மரணித்தவர்களின் நினைவாக மரக்கன்றும் நடப்பட்டது. (க-9)

## ஒரே நாளில் 4,800 பி.சி.ஆர். பரிசோதனைகள்



கொழும்பு,ஒக்.8

நாட்டில் நேற்று முன்தினம் மட்டும் 4 ஆயிரத்து 800 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இந்தத்தகவலைஅவர்வெளியிட்டார். கொரோனா தொடர்பில் எந்தவொரு தகவலையும், அரசு மறைக்கவில்லை எனவும் சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டினார். (க-44)

# எம்.பிக்களை சந்திப்பதற்கு அலைந்து திரியும் மக்கள்!

## உரிய ஏற்பாடு செய்யுமாறு கோரிக்கை

வவுனியா, ஒக்.8

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திப்பதில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கும் நேரம் தெரிவிக்கப்படாமையால், தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு அவர்களின் அலுவலகங்களுக்கு அலைந்து திரிய வேண்டியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையே காணப்படும் இடைவெளியை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ்.சந்திரகுமார் தெரிவித்தார்.

பொதுமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தொடர்புகொள்ள முடியாது எமது அமைப்பைத் தொடர்பு கொள்கின்றனர். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு அலுவலகங்கள் உள்ளன என்றபோதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு இருப்பதில்லை. அலுவலகங்களில் உள்ளோரும் மக்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இடையே சரியான தொடர்பாடலை ஏற்படுத்துவதில்லை.

இந்த இடைவெளி நிரப்பப்பட வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களை மக்கள் சந்திப்பதற்குரிய நேரத்தைத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-110)

# பொய் அறிக்கை வெளியிட்டு மக்களை ஏமாற்றுகின்றனர்!

## பிரதமரைச் சாடுகின்றார் சஜித்



கொழும்பு, ஒக்.8

**பொய்யான அறிக்கைகளை வெளியிட்டு நாட்டு மக்களைத் தவறான முறையில் வழிநடத்த வேண்டாம். கணக்காளர் நாயகம் தொடர்பான விடயங்களில் மாற்றங்கள் ஏற்படுத்துகின்ற மையை அரசு தவிர்த்துக்கொள்ள வேண்டும்.**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் உள்ளதாவது:

நாடாளுமன்றில் நிதிக் கட்டுப்பாட்டைக் குறைமதிப்புக்கு உட்படுத்தும் அரசின் சதிக்கு எதிராக அனைத்துச் சக்திகளும் ஒன்றிணைய வேண்டும்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தில் அரச காணக் காய்வுக்குப் பாதிப்பு ஏற்படாது என்றும், எதிர்க்கட்சியினர் போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிக்கை வெளியிட்டுள்ளார். உண்மைகளை மறைத்து மக்களை ஏமாற்றும் வகையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பொய்யான அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் மக்களைத் தவறாக வழிநடத்த வேண்டாம். 20ஆவது திருத்தத்தின் ஊடாக கணக்காளர் நாயகத்தைப் பலவீனப்படுத்த வேண்டாம். பொதுத் தணிக்கை தொடர்பான விதிகள் அடங்கிய 153 மற்றும் 154 பிரிவுகளில் திருத்தம் செய்யக்கூடாது என்று அரசை, முக்கியமாக பிரதமரைக் கோருகின்றோம் - என்றார். (எ-இ)

# வவுனியாவில் 56.1 மி.மீற்றர் மழைவீழ்ச்சி

வவுனியா, ஒக்.8

வவுனியாவில் நேற்றுமுன்தினம் முதல் நேற்றுக்காலை வரையில் 56.1 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் வவுனியா நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் முதல் நேற்றுக் காலை வரை பெய்த மழையால் வவுனியாவின் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது. மழையுடனான காலநிலை தொடரும் வாய்ப்புக்கள் உள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-110)

# சின்னக்குளம் சீரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.8

யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதியில் உள்ள சின்னப்பள்ளி வாசல் பகுதியில் அமைந்துள்ள சின்னக்குளத்தைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையை யாழ்ப்பாணம் மாநகர சபை ஆரம்பித்துள்ளது.

35 ஆண்டுகளாகத் துப்புரவு செய்யப்படாதிருந்த இந்தக் குளம் சீரமைக்கப்பட்டு, அருகில் உள்ள பற்றைகள் வெட்டப்பட்டு துப்புரவு செய்யப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-17)

# மாநகர சபை ஊழியர்களுக்கு பரிசோதனை

கொழும்பு,ஒக்.8

கொழும்பு மாநகர சபையில் பணிபுரியும் 250 ஊழியர்களுக்கு கொரோனா பரிசோதனை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையில் பணியாற்றும் பெண் ஊழியர் ஒருவரின் தாயாருக்கு, கொரோனா தொற்றியுள்ளமையால், பரிசோதனை நடத்தப்படவுள்ளது. (க-இ)

# கழிவுப்பொருள் கொள்கலன்: ரூ.1.69 பில். கோரும் இலங்கை



கொழும்பு, ஒக்.8

பிரிட்டனில் இருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட கழிவுப்பொருள்கள் அடங்கிய 263 கொள்கலன்களால் ஏற்பட்ட நட்டங்களுக்காக அரசு 1.69 பில்லியன் ரூபா இழப்பீடு கோரியுள்ளது. பாஸல் உடன்படிக்கையின் அடிப்படையில் இந்த இழப்பீடு கோரப்பட்டுள்ளது என்று சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கொள்கலன்கள் பிரிட்டனில் இருந்து 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் சட்டவிரோதமாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. 130 கொள்கலன்கள் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திலும், 133 கொள்கலன்கள் கொழும்பு துறைமுக வளாகத்திலும் சேமித்து வைக்கப்பட்டிருந்தன.

இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து இதுவரை 21 கொள்கலன்கள் பிரிட்டனுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்ததும் ஏனைய கொள்கலன்களும் திரும்பி அனுப்பப்படும் என்று சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

# பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவி மீண்டும் அஜித்துக்கு



யாழ்ப்பாணம், ஒக்.8

பொலிஸ் ஊடகப் பேச்சாளராக பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன இதுவரை பொலிஸ் ஊடகப் பேச்சாளராக பதவி வகித்த நிலையில், உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் அவர் அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பதவி வகித்திருந்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட ரிஷாத் பதியுதீனின் சகோதரர் ரியாட் பதியுதீனின் விடுதலை தொடர்பில் முரண்பாடான அறிக்கைகளை இரு சந்தர்ப்பங்களில் ஜாலிய சேனாரத்ன ஊடகங்களுக்கு வழங்கியமையை அடுத்தே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-22)

# அநாவசியமாக வைத்தியசாலை வரவேண்டாமென அறிவுறுத்தல்



வவுனியா, ஒக்.8

அத்தியாவசிய சிகிச்சை தேவைகள் இன்றி வைத்தியசாலைக்கு வருவதை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர் நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று நிலைமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முக்கியமாக கர்ப்பிணிகள், குழந்தைகள் அவசிய தேவை தவிர்ந்து வைத்தியசாலைக்கு வருவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும். மாதாந்த மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ளும் நோயாளர்கள் மாவட்ட வைத்தியசாலைக்குத் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தித் தகவல் பெற்ற பின்னர் வரவும். கொரோனா வைரஸ் பரவலைக் கருத்தில் கொண்டு வைத்தியசாலை வளாகத்தில் தொற்று நீக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (எ-18)

# கள் விற்பனையகங்களை நவீனப்படுத்த நிதி தேவை

## பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.8

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கள் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துவதற்கு அரசு நிதி ஒதுக்க வேண்டும் என்று பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

சங்கங்களின் வலிகாமம் கொத்தணியின் தலைவர் எஸ்.செல்வராசா இது தொடர்பாகத் தெரிவித்துள்ளதாவது:

குடாநாட்டில் உள்ள பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளன. போத்தலில் அடைக்கப்படும் கள்ளுக்கான உற்பத்தி வரியை அரசு குறைக்க வேண்டும். மூடப்பட்டுள்ள கள் விற்பனை நிலையங்களை மீளத் திறக்கவும், புதிய கள் விற்பனை நிலையங்களைத் திறக்கவும் அரசு அனுமதிக்க வேண்டும்.

வரி அதிகரிப்பு, போதிய சந்தை வாய்ப்பின்மை என்பவற்றால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பிரச்சினைக்கு உரியவர்கள் தீர்வு பெற்றுத்தர வேண்டும் - என்றார். (எ-17)

# அரசியல் சக்திகளின் அதிகாரப் போட்டிக்கு இலங்கை மைதானமாக அமையாது

## வெளிவிவகார செயலாளர் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக்.8**
**புவிசார் அரசியல் சக்திகளின் அதிகாரப் போட்டிக்கு இலங்கை மைதானமாக அமையாது எனவும், அவ்வாறு போட்டி நடைபெற்றால் குறைந்தபட்சம் அதன் மத்தியஸ்தராக இலங்கை இருக்க வேண்டும் எனவும் வெளிவிவகார செயலாளர் அட்மிரல் ஜயனாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.**

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரியில் நேற்று நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்து சமுத்திரத்தின் கேந்திர நிலையமாக அமைந்துள்ள இலங்கையை உலகின் பலம் பொருந்திய நாடுகள் ஒரு களமாக பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்க முடியாது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். தேசிய நலன்களைக் கருத்தில் கொண்டு கடல்சார் வெளியுறவுக் கொள்கைகள் வகுக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார். இலங்கையை கருவியாகப் பயன்படுத்திக் கொண்டு அதிகார சக்திகள் தங்களுக்கு இடையில் மோதிக் கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)

### தொற்றுக்குள்ளான மாணவியின்

# பாடசாலை சமூகத்தினருக்கு கொரோனா இல்லை

கொழும்பு, ஒக்.8
திவுலபிட்டியில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட 16 வயது சிறுமியின் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கான கொரோனாப் பரிசோதனை முடிவுகள் வெளியாகியுள்ளன.

53 ஆசிரியர்கள் மற்றும் 48 ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில், அவர்களில் எவரும் கொரோனாவால் பாதிக்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இதுவரை பி.சி.ஆர் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட 42 மாணவர்கள் நீர்கொழும்பிலுள்ள ஒரு தனிமைப்படுத்தல் மையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களுடைய பரிசோதனை முடிவுகள் இன்னும் வெளியாகவில்லை. இதேவேளை மேலும் 6 பேர் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (ற-இ)

### போக்குவரத்து திணைக்களங்களுக்கு

# பூட்டு

கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில், நாரஹேன்பிட்டி மற்றும் வேரஹெர ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள போக்குவரத்து திணைக்களங்களை மூன்று நாள்களுக்கு தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். இதற்கமைய, எதிர்வரும் 7, 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் பொது மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு இந்த பகுதிகளில் அமைந்துள்ள போக்குவரத்துத் திணைக்கள அலுவலகங்கள் திறக்கப்படமாட்டாது என்று போக்குவரத்து திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

### அஹங்கம பிரதேச விகாரையிலுள்ள

# அனைத்து பிக்குகளும் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஒக்.8
மினுவாங்கொடவில் கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டதால், காலி -அஹங்கம பிரதேசத்திலுள்ள விகாரையைச் சேர்ந்த அனைத்து பிக்குமார்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று ஹபராதுவ பொது சுகாதார வைத்திய அதிகாரி பமோத சிறிவர்தன தெரிவித்துள்ளார். காலி அஹங்கம பிரதேசத்தின் விகாரையிலுள்ள பிக்கு ஒருவர் அண்மையில் மினுவாங்கொட பிரதேசத்திலுள்ள தனது உறவினர் வீட்டிற்குச் சென்று திரும்பியுள்ள நிலையில், அந்த விகாரையைச் சேர்ந்த 16 பிக்குகள் கொரோனாச் சந்தேகத்தால் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தின் பின்னர், மினுவாங்கொடவில் கொரோனா பரவல் ஏற்பட்டதால் தற்போது அங்குள்ள அனைத்துப் பிக்குகளும் தனிமைப்படுத்தப்பட்டனர். (ற-இ)

# இலங்கை மாணவி விபத்தில் உயிரிழப்பு

## சாரதிக்கு பத்து ஆண்டுகள் சிறை

ஆஸ்திரேலியாவில் இலங்கை மாணவியொருவர் விபத்தில் உயிரிழப்பதற்கு காரணமாக இருந்த சாரதிக்கு பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி அதி வேகமாக வாகனத்தைச் செலுத்தியமை, விபத்தை மேற்கொண்டு தலைமறைவாகியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில், சாரதிக்கு நீதிமன்றம் இந்தத் தண்டனையை விதித்துள்ளது. 20 வயதான நிசாலி பெரேரா என்ற இலங்கை மாணவி கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

இந்த விபத்தை ஏற்படுத்திய 38 வயதான ஷேன் கோச்ரேனே என்ற சாரதிக்கு விக்டோரியா நீதிமன்றம் பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது. இந்தச் சாரதி ஏற்கனவே மூன்று தடவைகள் போக்குவரத்து விதி மீறல்கள் தொடர்பிலான குற்றச் செயல்களில் ஈடுபட்டவர் என்பது விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (ற-இ)



# போதைக்கு இலக்காகும் பாடசாலை மாணவர்கள்

மட்டக்களப்பு, ஒக்.8
மட்டக்களப்பில் போதைப்பொருள் பாவனைக்கு அதிகளவான மாணவர்கள் ஈர்க்கப்படுகின்றனர். அதிலும் பாடசாலை மாணவர்களே அதிகம் இலக்கு வைக்கப்படுகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் போதைப்பொருள் தடுப்பு செயலணியின் மாவட்ட மட்ட கூட்டம் அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 13 வயது தொடக்கம் 17 வயதினரே போதிய விழிப்புணர்வும் பெற்றோரின் கண்காணிப் பின்றியும் வழி தவறுகின்றனர். போதைப்பொருள் தடுப்பு பொலிஸ் பிரிவினரால் இவ்வாண்டு ஜனவரி முதல் இன்று வரையும் ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் 190 பேரும், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த 28பேரும், கஞ்சா வைத்திருந்த 245 பேரும் கோடா வைத்திருந்த குற்றச்சாட்டில் 155 பேரும், கசிப்பு உற்பத்தி விற்பனையில் ஈடுபட்ட 870 பேருமாக மொத்தம் 1488 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப்பொருள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. பாடசாலை மட்டத்தில் இருந்து போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையை ஆரம்பிக்கவும், அதிலும் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் முதல் முறையாக இதனை முன்னெடுக்கவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (வ-150)

# ஏற்றுமதிப் பயிர் ஊழியர்களுக்கு சிறப்பு கொடுப்பனவு

கொழும்பு, ஒக்.8
கொக்கோ, ஏலக்காய் மற்றும் மிளகு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு சிறப்புக் கொடுப்பனவு வழங்குவதற்கான விசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அதன்படி, குறித்த தொழில்களில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு தினசரி ஊழியமாக 831 ரூபா 44 சதம் வழங்கப்பட உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# பதவியிலிருந்து அர்ஜுன விலகல்



கொழும்பு, ஒக்.8
ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்டத் தலைவராக அர்ஜுன ரணதுங்க கடமையாற்றி வந்த நிலையில், அவர் தற்போது அந்தப் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

கட்சியில் ஏற்பட்ட உட்பூசல் நிலைமைகளின் போதிலும்கூட அவர், கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டிருந்த நிலையில், அண்மையில் கட்சியின் பிரதித் தலைவர் பதவி ருவான் விஜேவர்தனவுக்கு வழங்கியதைத் தொடர்ந்தே அவர் அந்தப் பதவியிலிருந்து விலகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ற-இ)

# பொதுப் போக்குவரத்தில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுங்கள்!

## போக்குவரத்து சபை கோரிக்கை

கொழும்பு, ஒக்.8

**பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும் போது சுகாதார ஆலோசனைகளுக்கமைய செயற்படுமாறு இலங்கை போக்குவரத்து சபை மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.**

முகக்கவசமில்லாத பயணிகளை பேருந்துகளில் ஏற்ற வேண்டாம் என அனைத்து பஸ் ஊழியர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, சுகாதார நடைமுறைகளை உரிய வகையில் பின்பற்றாத பஸ்களின் அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பஸ்களில் கிருமி ஒழிப்பினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கொமாண்டர் நிலான் மிரண்டா தெரிவித்துள்ளார்.

ரயில் சேவைகள் இன்றும் வழமை போன்று முன்னெடுக்கப்படும். சுகாதார நடைமுறைகளுக்கு அமைய பயணியுங்கள். ரயில்களில் உணவுப்பொருள்களை கொள்வனவு செய்வதையும் யாசகர்களுக்கு பணம் வழங்குவதையும் தவிருங்கள் என ரயில்வே திணைக்களம் பயணிகளைக் கேட்டுள்ளது. (வ-இ)





# போதைக்கு எதிராக விழிப்புணர்வு பேரணி

கொடிகாமம், ஒக்.8

போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியொன்று கேகேபி இளைஞர் கழகத்தினால் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் எவரி டேய் எவரி புறெஜெக்ட் என்ற செயற்திட்டத்தின் கீழ் சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு இப் பேரணி நடாத்தப்பட்டுள்ளது.

யாழ் கொட்டடி பொதுச் சந்தையில் ஆரம்பமாகிய இப் பேரணி யாழ்ப்பாணம் பேருந்து தரிப்பிடத்தில் நிறைவடைந்தது. இதில் யாழ்ப்பாணம் கேகேபி இளைஞர் கழகம், மானிப்பாய் றோட்டரி கிளப், விதையனைத்தும் விருட்சமே, குருநகர் ஜோசப்வாஸ் இளையோர் மன்றம், கலாநிதி சனசமூக நிலையம் (சென் றோக் சன சமூக நிலையம் (குருநகர்), யாழ் வானம்பாடிகள் சிறுவர் கழகம் போன்ற சமூக மட்ட அமைப்புகள் கலந்துகொண்டிருந்தன. (வ-159)



# வாழ்வாதார உதவி

இளவாலை பகுதியில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்றிட்டத்தின் கீழ் வாழ்வாதார உதவியாக கோழிக்கூடொன்று வழங்கப்பட்டது. இதற்கான நிதியுதவியை இளவாலையைச் சேர்ந்த, தற்போது அமெரிக்காவில் வசித்துவரும் நலன்விரும்பி ஒருவரும் லண்டனைச் சேர்ந்த நிமால் விலோஜினி என்பவரும் வழங்கியுள்ளனர். (வ-222)

# நீர்த் தாங்கி புனரமைப்புக்கு நிதி

வவுனியா, ஒக்.8



வவுனியா கோதண்டர் நொச்சிக்குளம் அ.த.க. பாடசாலையில் பழுதடைந்த நிலையிலுள்ள நீர்த் தாங்கியைப் புனரமைப்பதற்கு லண்டன் என்பீல்ட் நாக பூஷணி அம்பாள் ஆலயம் நிதி உதவி அளித்துள்ளது. அதற்கான நிதியை வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவர் ப.லம்போதரன் பாடசாலையின் அதிபரிடம் வழங்கினார். (வ-110-222)

# உடுவில் பிரதேச செயலக பணியாளருக்கு பி.சி.ஆர்.

உடுவில், ஒக்.8

உடுவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என உடுவில் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் பி.சி.ஆர் பரிசோதனைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த மாதம் கந்தரோடை ஆரம்ப சுகாதார நிலையம், ஏழாலை முத்தமிழ் மன்றம், குப்பிளான். விக்கினேஸ்வர சன சமூக நிலையம், தாவடி வேதவி நாயகர் கோவிலடி ,உடுவில் கற்பகப் பிள்ளையார் கோயிலடி ஆகிய பகுதிகளில் வைத்து ஓட்டோ ஓட்டுநர்கள், மற்றும் அதிகளவு பொதுமக்களுடன் பழகும் வியாபாரிகள் என சுமார் 200 க்கும் மேற்பட்டவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந் நிலையில் தற்போதுள்ள கொரோனா அலைப் பரம்பலை எதிர்கொள்ளும் வகையில் உடுவில் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை பி.சி.ஆர் சோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கே.கே.எஸ் வீதி, சுன்னாகம், பலாலி வீதி புன்னாலைக்கட்டுவன் தெற்கு ஆகிய பகுதியின் ஊடாகச் செல்லும் பொதுப் போக்குவரத்து வாகனங்களில் பயணம் மேற்கொண்டவர்களுக்கு சுகாதாரப் பரிசோதகர்களால் சுகாதார பாதுகாப்பு நடைமுறை தொடர்பில் விழிப்பூட்டும் நடவடிக்கைகளும் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (வ-39)



கச்சாய், கெற்பேலி கடற்கரைப் பகுதிகள் சூழல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 522 ஆவது படையணியின் ஏற்பாட்டில் நேற்றுத் துப்புரவு செய்யப்பட்டன. இதில் படையினருடன் அப்பகுதி பொதுமக்கள், கடற்றொழிலாளர்கள், அரச அலுவலர்கள், சுகாதாரப் பணியகத்தினர் போன்றோர் கலந்து கொண்டனர். (வ-9)

# ஆண்டு நிறைவும் சிறுவர் தின நிகழ்வும்

முல்லைத்தீவு, ஒக்.8

முல்லைத்தீவு வள்ளுவர்புரத்தில் உள்ள சங்கநாதம் கலாமன்றத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும், சிறுவர் தின நிகழ்வும் தலைவர் ப.ராஜ்குமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலக கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஒளித்திலகன் கலந்து கொண்டார். (வ-159)




# தனிமையில் வசித்து வந்த முதியவர் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, ஒக்.8

குடும்பத்தினரைப் பிரிந்து வீட்டில் தனிமையில் வசித்து வந்த முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். முல்லைத்தீவு புதுக் குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட தேராவில் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சண்முகம் நல்லையா (வயது 61) என்ற வயோதிபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் உறவினர்கள் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய தடயவியல் பொலிஸார், திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.சற்குணதாஸ், கிராம சேவகர் ஆகியோர் முன்னிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனப் புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளார்கள். (வ-19)





# இன்றைய நாள்

**மேடம்:** உறவினர் வருகையால் வீட்டில் உற்சாகம் பொங்கும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதக மானதீர்ப்புவரும். பணியாளர்களைத் தட்டி கொடுத்து வேலை வாங்கு வீர்கள்.

**இடபம்:** உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். பணப்புழக்கம் உண்டு. மனைவியின் பாராட்டு கிடைக்கும். திடீர் யோகம் கிடைக்கும் நாள். குடும்ப வருமானத்தை உயர்த்துவீர்கள்.

**மிதுனம்:** நீண்ட நாள் வேண்டுதல்கள் நிறைவேறும். உறவினர்களின் தொல்லை குறையும். கனவு நன வாகும் திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் தவறுகளைத் தவிர்ப்பீர்கள்.

**கடகம்:** மேலதிகாரிகளின் நன்மதிப் பைப் பெறும் சாதனை செய்வீர்கள். எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்வீர்கள். நம்பிக்கை யுடன் செயல்பட்டால் வெற்றி பெற லாம்.

**சிம்மம்:** மனைவியுடன் அன்பை வலுப்படுத்துவீர்கள். சந்தோஷச் செய்தி வரும். உற்சாகமான போக்கு காரணமாக மனதில் மகிழ்ச்சி நிலவும். சொத்துகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** மனதில் நேற்றிருந்த கவலை கள் அகலும் நாள். பணியில் உங்க ளுக்குத் திருப்தியான உணர்வு ஏற்ப டும். குழந்தைகளுக்கான முயற்சி தடையின்றி நடைபெறும்.

**துலாம்:** எதிர்பார்த்த தகவல் ஒன்று வந்து சேரும். எதிரிகளின் பலவீனத்தை அறிந்து செயல்பட்டு வெல்வீர்கள். பிள்ளைகளின் செல்வாக்கு உயர்வதால் பெருமிதம் ஏற்படும்.

**விருச்சிகம்:** வருமானங்களுக்காக குறுக்கு வழியில் செல்ல வேண்டாம். பயணத்தின் போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. கடமையில் இருந்த தொய்வு அகலும்.

**தனுசு:** வாழ்க்கைத் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். நேர்மையான அணுகுமுறை காரணமாக பிரச்னை வராது.

**மகரம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கு வதால் நிம்மதி கூடும். தேவைகளை அடைவதற்கு அதிக பணம் செலவழிப் பீர்கள். பணியாளர்களிடம் பக்குவமாக நடந்து கொள்ளுங்கள்.

**கும்பம்:** வெளியுலகத் தொடர்பு நீங்கள் விரும்பும் ஆதாயத்தை தரும். பிள்ளை களுக்கு குடும்பச்சுமை கூடும். உபரி வருமானம் வரும்.

**மீனம்:** சக பணியாளரிடையே நல்ல புரிந்துணர்வுகாணப்படும். சொத்துகளால் லாபம் உண்டு. பணி பற்றிய நற்செய்தி வரும். புதிய பாதை தெரிவதால் மனபலம் பெருகும்.

# தமிழர் –முஸ்லிம்களைப் பிரிக்க உளவுச் சேவை மறைமுகமாக உதவியது

## ரணில் ஆணைக்குழுவில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.8

**தமிழர்களுடன் இணைந்து இருந்த முஸ்லிம்களை தனியான இனத்துவ அடையாளத்தைக் கொண்ட தரப்பாகப் பிரிக்க உளவுத்துறைக்கு மிகப் பெரும் தேவை இருந்த நிலையில், முஸ்லிம்களின் அத்தகைய கோரிக்கைக்கு எமது உளவுச் சேவையும் மறைமுகமாக உதவியது. புலிகளுடனான யுத்தத்தின்போது உளவுத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள இது ஓர் உத்தியாக பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் நேற்றுமுன்தினம் சாட்சியமளித்த அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலை புலிகளால் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட பின்னர், முஸ்லிம்களை தனித்துவ அடையாளத்துடன் அரசியலில் அடையாளப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை மேலெழுந்தது. அப்போதைய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பும் அந்தக் கொள்கையில் இருந்தார். முஸ்லிம்களை இவ்வாறு தமிழர்களிடம் இருந்து பிரித்து தனித் தரப்பாக அடையாளப்படுத்த எமது உளவுச் சேவைக்கும் பெரும் தேவை இருந்தது. அது ஒரு மறைமுக தந்திரோபாய வியூகம். அவ்வாறு முஸ்லிம்கள் தனித் தரப்பாக அடையாளப்படுத்தப்பட்டதன் ஊடாக யுத்தத்தின்போது, உளவுத் தகவல்களைப் பெற்றுக் கொள்வது இலகுவானது- என்றார்.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் அய்ஷா ஜினசேனவின் நெறிப்படுத்தலில், அவரது கேள்விகளுக்கு பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க சுமார் ஒரு மணி நேரம் வரை ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்தார். அதன் பின்னர் சுகயீன நிலைமை காரணமாக பிறிதொரு திகதியை சாட்சியமளிக்கக் கோரி, அங்கிருந்து வெளியேறினார். இதன்போது எதிர்வரும் 13 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு அவருக்கு மீள ஆணைக்குழுவில் ஆஜராக அறிவித்தல் விடுக்கப்பட்டது. (ந-இ)





குருத்துவம் திருவருட்சாதனம் பெற்று அருட்பணியாளர்களாக திருநிலைப்படுத்தப்பட்டு 25 ஆவது ஆண்டு யூபிலி விழா கடந்த சனிக்கிழமை தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்றது. அருட்பணி பெனோ அலெக்சாண்டர் அடிகளார் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. (ஐ-60)

## ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து

# 400 மில்லியன் அமெ. டொலர் கடன்

கொழும்பு, ஒக்.8

அரச பாடசாலைகளில் இரண்டாம் நிலைக்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 400 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியைக் கடனாகப் பெறுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெறப்படும் மேற்படி கடனுதவியின் ஊடாக அரச பாடசாலைகளில் இரண்டாம் நிலைக் கல்விக்கான பாடவிதானங்கள் மற்றும் மதிப்பீட்டு முறைமை என்பன மறுசீரமைக்கப்படவுள்ளன.

அதேபோன்று இக்கடனுதவி மூலம் உரிய வசதிகளுடன் கூடிய முழுமையான இரண்டாம் நிலைக்கல்வி பாடசாலை வலையமைப்பை பிரதேச செயலகமட்டத்தில் விருத்தி செய்வதுடன், அதன்மூலம் அனைத்து மாணவர்களுக்கும் தரமான இரண்டாம் நிலைக்கல்வி வாய்ப்பை உறுதிப்படுத்துவதற்கும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. (ந-இ)

# மாணவர்களின் தொகையை 45 ஆக உயர்த்துவதற்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஒக்.8

வகுப்பறை ஒன்றில் மாணவர்களின் எண்ணிக்கையை 45 ஆக உயர்த்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வகுப்பறையில் மாணவர் எண்ணிக்கையை 35 ஆக பேணுவதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாள்தோறும் மாணவர்களை வகுப்புகளில் சேர்ப்பது தொடர்பில் கல்வி அமைச்சிடம் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்தன. இதன் அடிப்படையில் எதிர்வரும் 2021ம் ஆண்டு முதல் வகுப்பறை ஒன்றின் மாணவர் எண்ணிக்கையை 45 ஆக உயர்த்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதியின் திட்டத்திற்கு அமைய ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வரை வகுப்புக்களில் மாணவர்களின் அதிகபட்ச எண்ணிக்கை 45 ஆக பேணப்பட வேண்டியது அவசியமானது எனவும் எதிர்வரும் 2023ம் ஆண்டு வரையில் இந்த எண்ணிக்கை [illegible] அமுல்படுத்த வேண்டுமெ[illegible] கல்வி அமைச்சு அமைச்சர[illegible] கோரியிருந்தது.

இதேவேளை, மாணவர்க[illegible] சாலைகளில் சேர்ப்பது [illegible] லும் சில திருத்தங்களை அ[illegible] செய்வதற்கு அரசாங்கம் [illegible] செலுத்தி வருகின்றது.

# கொரோனா தொற்றுக்குள்ளான பெண் முதலாவது தொற்றாளரல்லர்

### தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.8
மினுவாங்கொட தொழிற்சாலையில் ஏற்பட்டுள்ள கொரோனாக் கொத்தணி ஏற்கனவே ஏற்பட்டுள்ளது என்றும், கடந்த சில தினங்களுக்கு முன்னர் கம்பஹா வைத்தியசாலையில் அடையாளம் காணப்பட்ட பெண், முதலாவதாக தொற்றுக்குள்ளான பெண் அல்ல என்றும் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.
இந்தத் தொழிற்சாலையில் பணியாற்றும் பலர் கடந்த செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் காய்ச்சல் மற்றும் சுவாச பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளனர் என்று தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
கொரோனாத் தொற்றுக்குள்ளான பெண்ணுக்கு கடந்த செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதியே நோய் அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன. அவர் கம்பஹா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டுள்ளார்.
தொழிற்சாலை ஊழியர்களின் தகவலின் அடிப்படையில், செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதியில் இருந்து பலருக்கு காய்ச்சல் மற்றும் சுவாசப் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன என தெரியவந்துள்ளது. பின்னர் அந்தப் பிரச்சினை அதிகரித்துள்ளது. தற்போதைய நிலைமை தொடர்பில் சுகாதார பிரிவிடம் தெளிவுபடுத்தினோம்.
தொழிற்சாலைக்கு வெளிநாட்டவர்கள் வந்தமைக்கான சாட்சிகள் இன்னமும் கிடைக்க வில்லை - என்றார். (ந-இ)

# ஆடைத் தொழிற்சாலை முகாமையாளருக்கும் கொரோனா

கொழும்பு, ஒக்.8
மினுவாங்கொடையிலுள்ள ஆடைத் தொழிற்சாலையின் முகாமையாளருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நபர் 3 பிள்ளைகளின் தந்தை எனத் தெரியவருகின்றது. இவர் மாத்தளை, இஹெலபொல பிரதேசத்தை சேர்ந்தவராவார்.
ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து நாடளாவிய ரீதியில் பலரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.
இதையடுத்து தொழிற்சாலையின் முகாமையாளருக்கும் கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. (ந-இ)

# நாட்டின் பாதுகாப்பு கருதி மருத்துவமனை செல்லுங்கள்

### சுகாதார அமைச்சர் அறிவுறுத்தல்



**கொழும்பு, ஒக்.8**
**மக்களின் சுகாதார, பாதுகாப்பு விடயங்களை கருத்திற்கொண்டு அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைகளுக்குச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுங்கள் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.**

விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள சுகாதார அமைச்சர் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது,
"சுகாதார அமைச்சினால் கம்பஹா மாவட்டத்தில் நோயாளிகளை அடையாளம் காண்பதற்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.
இதன்போது அவர்கள் நோயாளிகள் என உறுதியானதைத் தொடர்ந்து அவர்களை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்காக சுகாதார அமைச்சினால் அவர்களின் வீடுகளுக்கு அம்புலன்ஸ்களை அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
எனினும் சிலர் சிகிச்சை நிலையங்களுக்கு செல்வதனை புறக்கணித்துள்ளனர் என தகவல் கிடைத்தது.
இலங்கை மக்களின் சுகாதார, பாதுகாப்பு என்பவற்றைக் கருத்திற்கொண்டு சுகாதார அமைச்சினால் வீடுகளுக்கு அனுப்பப்படும் அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைகளுக்குச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்.
சிகிச்சைக்காகச் செல்லாமல் அதனைப் புறக்கணிப்பது தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் தவறு என்பதனால், அவ்வாறு செய்பவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும்" எனச் சுகாதார அமைச்சர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ந-இ)

# வெள்ளவத்தையில் பொலிஸ் பதிவு

### விபரங்களை வழங்குமாறு பொலிஸார் கோரிக்கை

கொழும்பு, ஒக்.8
வெள்ளவத்தை பிரதேசத்திற்குள் நிரந்தர, தற்காலிக மற்றும் சட்டவிரோத வதிவாளர்கள் தமது விபரங்களை வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் வழங்குமாறு கோரி துண்டுப்பிரசுரம் வழங்கப்பட்டுள்ளது.
இத் துண்டுப் பிரசுரத்தில் பொலிஸ் சட்டக்கோவை 76 ஆம் இலக்க சட்டத்தின் படி குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் குற்றங்களைத் தடுத்தல் மற்றும் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றைத் தடுத்தல் என்பவற்றின் நிமித்தம் தமது வீடுகளுக்கு வெளிநபர்களை வேலைகளுக்காக அழைத்து வருவதைக் குறைத்துக்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
மேலும், அவ்வாறு எவரையேனும் தமது வீடுகளுக்கு அழைத்து வருவதாயின் எழுத்து மூலமாக வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு துண்டுப்பிரசுரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந-இ)

# நாட்டுக்குள் வரும் விமானங்களுக்கு கட்டுப்பாடு?

கொழும்பு, 8
வெளிநாடுகளில் சிக்கியிருந்தவர்களை நாட்டுக்கு அழைத்துவரும் விமானங்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த உள்ளதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் இன்னும் தெளிவு இல்லாததால், அடுத்த ஓரிரு நாள்களில் இலங்கை வரும் விமானங்களை மட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இதன்படி, இலங்கைக்கு வரவிருந்த விமானங்கள் அடுத்த இரண்டு நாள்களில் வந்து சேரும் எனவும், அதன் பின்னர் கட்டுப்பாடு விதிக்கப்படும் எனவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ந-இ)

# இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட ஐவருக்கு கொரோனா உறுதி

கொழும்பு, ஒக்.8
கம்பஹா - மிரிஸ்வத்த, மெதவத்த பகுதியில் இடம்பெற்ற இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையின் பணியாளர்கள் ஐவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது என கம்பஹா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.
தொற்றுக்குள்ளானவர்கள் மினுவாங்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், கடந்த 27ம் திகதி குறித்த இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்கள் தங்களது வீடுகளில் சுய தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி கோரிக்கை விடுத்துள்ளார். இதனிடையே, இறுதிச் சடங்கு நடைபெற்ற மெதவத்த பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கிருமி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

### கொரோனா அறிகுறிகளை

# மறைத்து வைப்பது தண்டனைக்குரியது

### அரசாங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.8
கொவிட் - 19 நோய் அறிகுறிகளை மறைத்து வைத்திருக்கின்றமை தண்டனைக்குரிய குற்றமாகும் என அரசாங்கம் எச்சரித்துள்ளது. மேலும், காய்ச்சல் உள்ளிட்ட கொவிட்-19 தொற்று அறிகுறி இருப்பின் அருகில் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்குச் சென்று ஆலோசனை பெறுமாறு அரசாங்கம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.
இதேவேளை, கம்பஹா, வெயாங்கொடை, மினுவாங்கொடை மற்றும் திவுலபிட்டிய ஆகிய பொலிஸ் பிரிவுகளில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் உள்ளது.
இக் காலப்பகுதியில் சகலரும் வீடுகளுக்குள்ளே இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந-இ)

## கொரோனா தாக்கத்தால் மூத்தோர் வாழ்வு சவால்

### வாகீசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.8

தற்போதைய கொவிட் 19 தாக்கத்தால் உலகளாவிய ரீதியில் முன்னோர்களின் வாழ்வியல் பெரும் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

கைதடி அரச முதியோர் இல்லத்தில் இடம்பெற்ற சர்வதேச முதியோர் தின விழாவில், அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மூத்தோரின் விருப்பு இல்லத்தின் சிறப்பு என்ற தொனிப்பொருளில் இந்த முதியோர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

தற்போது உலகத்தையே கதிகலங்க வைக்கும் கொரோனா, மூத்தோர்களின் வாழ்வியலுக்குப் பெரும் சவாலை ஏற்படுத்துகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் தகவலின்படி 65 வயதுக்கு மேற்பட்ட மூத்தோர் உலகளாவிய ரீதியில் சுமார் 703 மில்லியன் தொகையில் வாழ்ந்து வருகின்றனர்.

2030 ஆம் ஆண்டில் ஆயிரத்து 400 மில்லியன் தொகை என அவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்.

இவ்வாறான நிலையில் கொவிட்-19 தாக்கத்தால் உலக ரீதியில், மூத்தோர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் எமது நாட்டின் மூத்தோர்கள் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். அதிலும் இந்த இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்கள் சிறப்பாகப் பராமரிக்கப்படுகின்றனர்.

தற்போதைய கொவிட் 19 தாக்கத்திலும் கூட இல்லப் பணியாளர்களின் சிறந்த பராமரிப்பு பாராட்டத்தக்க விடயமாகும். என்றார்.

(சு-17)

# பிளாஸ்ரிக் பாவனையால் இயற்கைக்கு பெரும் அழிவு

### பாவனையைக் குறைக்குமாறு வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டு

மன்னார், ஒக்.8

**மன்னாரில் சுற்றுச் சூழல் மாசடைந்தால் பல மைல்களுக்கு அப்பால் இருந்து வரும் பறவைகள் கூடப் பாதிப்புக்குள்ளாகும். சுற்றுலாப் பிரதேசம் என்ற நிலைமையில் இருந்து மன்னாரை நீக்கும் நிலை ஏற்படலாம்.**

இவ்வாறு சமுதாய வைத்திய நிபுணர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்தார்.

பிளாஸ்ரிக் பொருள்களால் மனித இனம் உட்பட உயிரினங்களுக்கு ஏற்படும் விளைவுகளும், அவற்றிலிருந்து எவ்வாறு மீள்ச்சி பெறலாம் என்ற கருத்தில் கருத்தாடல் நானாட்டானில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிளாஸ்ரிக் பொருள்களால் மன்னாரில் பெரும் பாதிப்புக்கள் உண்டாகியுள்ளமையை காண முடிகின்றது. பிளாஸ்ரிக் பொருள்கள் பலவற்றை நாம் பாவனையில் இருந்து தவிர்த்துக்கொள்ள முடியும். ஆனால் நாம் அதைப் பற்றிச் சிந்திப்பதில்லை பிளாஸ்ரிக் பொருள்களால் சுமார் 250க்கும் அதிகமான உயிரினங்கள் அழிந்துள்ளன என்று கணிக்கப்பட்டுள்ளது. பிளாஸ்ரிக் பொருள்களைக் கடலில் வீசுவதில் இலங்கை உலக தரவரிசையில் 5 ஆவது இடத்தில் இருக்கின்றது என்று கூறப்படுகின்றது. பிளாஸ்ரிக் பொருள் ஒன்று அழிவதற்குக் குறைந்தது 100 ஆண்டுகள் எடுக்கும். பிளாஸ்ரிக் பொருள்களால் எமக்குப் புற்றுநோய் உட்படப் பல நோய்கள் ஏற்படுகின்றன.

வருடத்தில் சுமார் 5 ஆயிரம் மைல்கள் கடந்து பறவைகள் இலங்கைக்கு வருகின்றன. அந்தப் பறவைகள் தலைமன்னார், வங்காலைப் பகுதிக்கே அதிகம் வந்து செல்கின்றன. வண்ணாத்திப் பூச்சிகளும் மன்னாரிலேயே அதிகம் காணப்படுகின்றன.

ஆனால் இங்குள்ள சுற்றுச்சூழலால் இவைகளும் அழிவை நோக்கிச் செல்கின்றன. இங்கு சுற்றுச் சூழலை மேன்மைப்படுத்தி வைத்திருந்தால் சுற்றுலாத் துறை மேம்பட பல வாய்ப்புக்கள் இருக்கின்றன.

முன்பு சுறா மீனின் ஈரல் உடலுக்கு நலம் என சொல்லப்பட்டது. ஆனால் இப்பொழுது இதனைச் சாப்பிட வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கடலிலுள்ள பிளாஸ்ரிக் பொருள்களை அது உண்பதே அதற்குக் காரணம்.

பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருள்களை நாம் எரித்தாலும், புதைத்தாலும் ஆபத்தே. பொலித்தீன் பாவனையை குறைப்பதும், பாவித்தவற்றை சுழற்சி முறையில் பாவிப்பதுவுமே ஒரே வழி.- என்றார்.

(எ-60)



## பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு வீடு

வவுனியா,ஒக்.8

ஜனாதிபதியின் விசேட வீடமைப்புத் திட்டமான "உங்களுக்கு ஓர் வீடு, நாட்டுக்கு எதிர்காலம்" எனும் தொனிப்பொருளில், வவுனியா மணிபுரம் கிராமத்தில் வசிக்கும், சிவராசா லக்ஸ்மி என்ற பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்காக அமைக்கப்பட்ட வீடு நேற்றுக் கையளிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையால், ஆறு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வீட்டை, வவுனியா மாவட்டச் செயலாளர் சமன் பந்துலசேன பயனாளியிடம் கையளித்தார்.

இதேவேளை மரக்காரம்பளை, முதலியார்குளம், புதுக்குளம், வெளிக்குளம், சமனங்குளம் ஆகிய கிராமசேவகர் பிரிவுகளிலும், வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

(சு-110)

## கைக்குண்டு வீசியவருக்கு 10 வருடங்கள் கடூழியச்சிறை

திருகோணமலை, ஒக். 8

திருகோணமலையில்கைக் குண்டை வீசி வெடிக்கச் செய்ததன் மூலம், காயங்களை ஏற்படுத்தி, குற்றவாளியாக இனங்காணப்பட்டவருக்கு, 10 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

திருகோணமலை ஆண்டாங்குளம் பகுதியில் 2003 ஆம் ஆண்டு ரம்பண்டா முதியன்சலாகே ரந்திக சமன்குமார மற்றும் ரம்பண்டா முதியன்சலாகே ரொஹான் கிரிஷாந்தன் ஆகிய இருவருக்கும் எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால், 2019 ஆம் ஆண்டு திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் குற்றப்பகர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இரண்டு எதிரிகளுக்கும் எதிராக திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடத்தி, முதலாம் எதிரி குற்றவாளி என இனங்காணப்பட்டார்.

இதேவேளை இரண்டாவது எதிரியான ரம்பண்டா முதியன்சலாகே ரொஹான் கிரிஷாந்தன் என்பவருக்கு எதிரான குற்றங்கள் நிரூபிக்கப்படாத நிலையில், அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இதனையடுத்து முதலாம் எதிரியான ரம்பண்டா முதியன்சலாகே ரந்திக சமன் குமார என்பவர் ஆண்டாங்குளம் பகுதியில், மூன்று நபர்களுக்கு கைக்குண்டை வீசி வெடிக்கச் செய்து, காயங்களை ஏற்படுத்தினார் என்ற குற்றத்துக்காக, 10 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

காயத்துக்குள்ளான முதலாவது நபருக்கு ஒரு இலட்சம் ரூபா நஷ்டஈடு செலுத்துமாறும், இரண்டாவது, மூன்றாவது நபர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் நஷ்டஈடு செலுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

(க-45)



## அரிசி வி... அதிகரி...

யாழ்ப்பாணம், ஒ...
யாழ்.குடாநாட்டி... ...ரி
சியின் விலை தி... ...ன
அதிகரித்துள்ளது...
கடந்த வாரத்தில்... ...ா
125 ரூபாவாக ... ...ப்
பட்ட நாட்டரிசி, த... ...ு
கிலோ 130 ரூ... ...க
அதிகரித்துள்ளது...
கொரோனாத் ... ...ு
அச்சுறுத்தலை ... ...,
அத்தியாவசிய ... ...ள்
களின் விலைகள் சடுதி
யாக அதிகரித்து... ...ா.
இந்த நிலையில்... ...ி
யின் விலையும்...
ரித்துள்ளது.
பத்துக் கிலோ...
கொண்ட அரி...
ஆயிரத்து 25...
வில் இருந்து ...
300 ரூபாவ...
ரிக்கப்பட்டுள்ள...

## மஞ்சளுடன் மூவர் கைது




கொழும்பு, ஒக்.8

இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக நாட்டுக்குக் கடத்தி வரப்பட்ட, ஆயிரத்து 297 கிலோ கிராம் நிறையுடைய மஞ்சள் கைப்பற்றப்பட்டதுடன், சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சின்னப்பாடுபூனபிட்டிய பகுதியில் வைத்து நேற்றுக் காலை கடற்படையினரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-இ)

## கொழும்பு கோல்ப் கிளப்புக்குச் "சீல்"




கொழும்பு, ஒக்.8

கொழும்பு கோல்ப் கிளப் ஊழியரின் மகள் மினுவாங்கொடை ஆடைத் தொழிற்சாலையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளதால் கோல்ப் கிளப் நேற்றிலிருந்து மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

கோல்ப் கிளப் கார்டனில் பணியில் ஈடுபடும் ஊழியர் கடந்த சனிக்கிழமை வரை கடமைக்கு வந்துள்ளமையால், அவருடன் நெருக்கமாகப் பழகியோரைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-22)

# தொற்றை மறைத்தால் சொத்துக்கள் பறிமுதல்

கொழும்பு,ஒக்.8
தமது உடல்நிலை குறித்த விடயத்தை மறைப்பது, தவறான தகவல்களை வழங்குவது அல்லது கொரோனா வைரஸ் தொடர்பான தகவல்களை மறைப்பது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும் என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது போன்ற செயற்பாடுகளில் பலர் ஈடுபடுகின்றமை தெரிய வந்துள்ளது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொரோனா வைரஸ் ஆபத்து அதிகமாக உள்ள நேரத்தில், முக்கியமான தகவல்களை மறைப்பவர்கள் மீது குற்றவியல் கோவையின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். வைரஸ் பாதிக்கப்பட்ட பின்னர் ஒரு நபர் இறந்துவிட்டால், அலட்சியம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். வைரஸின் அறிகுறிகள் ஏதேனும் இருந்தால் சுகாதார அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். அறிகுறிகளைக் காட்டும் நபர்களுடன் நெருக்கமான தொடர்புடையவர்கள் சுயமாகத் தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

தொடர்புடையவர் தகவல்களை மறைப்பது குற்றமாக இருக்கும் போது, வைரஸின் அறிகுறிகள் காண்பிப்பவர்களை மறைத்து வைக்கும் முயற்சிக்கும் நபர்களும் ஒரு குற்றத்தைச் செய்கிறார்கள்.

அத்தகைய நபர்களது அசையக்கூடிய மற்றும் அசையாச் சொத்துகளும், தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் நோய்களைத் தடுக்கும் கட்டளைச் சட்டத்தின் கீழ் அதிகாரிகளால் கைப்பற்றப்படும்.- என்றுள்ளது. (சு-இ)

## சான்றிதழ் உள்ளவர்களுக்கே வெளிநாட்டு வேலைவாய்ப்பு

ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு,ஒக்.8
சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தகைமைச் சான்றிதழ்கள் உள்ள ஊழியர்களை, வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையில் ஈடுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தை, துரிதமாகவும், முறையாகவும் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

வெளிநாட்டு தொழில் வாய்ப்பு மேம்பாடு தொடர்பாக, ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கையின் புலம் பெயர் ஊழியர்கள் 1.2 மில்லியன் பேராகும். வருடாந்தம் சுமார் இரண்டு லட்சம் பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காகச் செல்வதோடு, இவ் வருமம் அந்தத் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நாடுகளுக்குத் திரும்ப முடியாமல் உள்ள ஊழியர்களின் தொழில் ஒப்பந்தங்களை நீடிப்பதற்காக, நிறுவனங்கள் மற்றும் துறைகளுடன் கலந்துரையாடுமாறும் ஜனாதிபதி, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு பணிப்புரை விடுத்தார் என்று ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (சு-இ)

## கஜேந்திரனின் கேள்விக்கு சபையில் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஒக்.8
தனது மக்களுக்காக உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்த தியாகி திலீபன் ஒசாமா பின்லேடனா அல்லது 12 வயது சிறுவன் பாலச்சந்திரனுக்குப் பிஸ்கட், தண்ணீர் கொடுத்து விட்டு சுட்டுக்கொன்றவர்கள் பின்லேடன்களா எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சபையில் கேள்வி எழுப்பியதையடுத்து, அரச மற்றும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொதித்தெழுந்தனர்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிதி திருத்தச் சட்ட வரைவு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே கஜேந்திரன், திலீபன் தொடர்பான கேள்வியை எழுப்பினார்.

இதையடுத்து ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய முன்னாள் அமைச்சரும், அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர பிரியதர்சனயாப்பா, "படையினர் பயங்கரவாதிகளையே அழித்தனர். அவர்கள் ஒரு சிறுவனைக் கூடக் கொன்றதில்லை" எனக் கூறிக்கொண்டிருந்த போது, சபைக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்த நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன், "உறுப்பினரே இது ஒழுங்குப் பிரச்சினை அல்ல" என்றார். எனினும், விடாத அநுர பிரியதர்சன யாப்பா, "கஜேந்திரனின் கூற்றை ஹன்சாட்டிலிருந்து நீக்க வேண்டும்" என்றார். இதையடுத்து எழுந்த இன்னும் சில புதுமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள், "எமது படையினர் ஒருபோதுமே சிறுவர்களைக் கொன்றதில்லை" என்று கூச்சலிட்டதுடன், அவர்களும் கஜேந்திரனின் கூற்றை ஹன்சாட்டிலிருந்து நீக்க வேண்டும் எனக் கூறியமையுடன் கடுமையாகத் திட்டித் தீர்த்தனர்.

எனினும், கஜேந்திரனின் கூற்றை ஹன்சாட்டிலிருந்து நீக்க உத்தரவிடாத நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன், "இந்த விடயத்தை சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு செல்கின்றேன்" என்றார்.

இதையடுத்து எழுந்த முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா, கஜேந்திரனின் கூற்றைக் கடுமையாகக் கண்டித்ததுடன், பாலச்சந்திரனின் மரணத்துக்கும், படையினருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றார்.

இது தொடர்பில் கஜேந்திரன் ஏதோ சொல்ல முயற்சிக்க எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தமிட்டு அவரை அடக்கி விட்டனர். (சு-22)

## அறிகுறிகள் எதுவுமின்றி ஊழியர்களுக்கு தொற்று

ஆடை தொழிற்சாலை நிறுவனம் அறிக்கை

கொழும்பு,ஒக்.8
கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகி வரும், மினுவாங்கொடை 'பிரண்டிக்ஸ்' ஆடை தொழிற்சாலையின் ஊழியர்கள் அறிகுறிகள் ஏதும் தென்படாத நிலையில் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.




'பிரண்டிக்ஸ்' ஆடை தொழிற்சாலை நிறுவனம் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மினுவாங்கொடை தொழிற்சாலையில் ஆயிரத்து 394 ஊழியர்கள் கொரோனாத் தொற்றுப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இதன்போது அதிக அளவு பரிசோதனைகள் இடம்பெற்றமையால், ஊழியர்களுக்குச் சில நேரம் காத்திருப்பதற்கு நேர்ந்தது.

உறுதிப்படுத்தப்பட்ட தொற்றுகளில் பெரும்பாலானவை அறிகுறியற்றவை அல்லது கொரோனாவுடன் தொடர்புடைய அறிகுறிகள் காட்சியளிக்காதவை. இந்தச் செயல்முறை முழுவதும் நாம் அனுபவித்த முக்கிய சவால்களில் ஒன்றாக அமைந்தது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நாங்கள் தொடர்ந்து தொடர்பில் இருக்கின்றோம். பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய தொடர்புகளைத் தனிமைப்படுத்தல் மையங்களுக்கு இடமாற்றும் போது, பாதிக்கப்பட்டவர்களின் வசதியைக் கவனிக்க எங்களால் முடிந்த அனைத்தையும் செய்கின்றோம்.

மேலும், அவர்கள் தனிமைப்படுத்தல் மையங்களில் தங்கியிருக்கும் போது, அவர்களுக்கு வசதியாக இருக்க உதவும் அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்து வருகின்றோம்.

எங்கள் ஊழியர்கள், சமூகங்கள் மற்றும் நமது தேசத்தின் நல்வாழ்வு எங்கள் முன்னுரிமையாக உள்ளது. இந்தச் சூழ்நிலையில் ஜனாதிபதி செயலகம், பாதுகாப்பு அமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் இலங்கை இராணுவம் எங்களுக்கு அளித்த ஆதரவையும் ஆலோசனையையும் நாங்கள் மிகவும் பாராட்டுகின்றோம் -என்றுள்ளது. (சு-22)

## பரீட்சைகளை பிற்போடுங்கள்

தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு,ஒக்.8
மாணவர்களையும், பெற்றோரையும் பீதிக்கு உள்ளாக்காது, பொதுப் பரீட்சைகளை பிற்போடுங்கள் என்று இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம், கல்வி அமைச்சிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போது நாடு முழுவதும் கொரோனாத் தொற்றானது சமூகப் பரவலாக உருவெடுத்துள்ளது.

பாடசாலைகள் மூடப்பட்டும், போக்குவரத்துகள் தடைப்பட்டும், மக்கள் தமது அன்றாட அத்தியாவசிய நடமாட்டங்களையும் தவிர்த்து வருகின்றனர்.

பொதுப் பரீட்சைகள் தொடர்பாக தீர்க்கமான முடிவு இதுவரையில் அறிவிக்கப்படாமல் இருப்பது, மாணவரையும், பெற்றோரையும் பீதிக்கு உள்ளாக்கும் செயற்பாடாகும்.

பரீட்சைகள் பிற்போடப்படுகின்றன. அதற்கான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று உடனடியாக கல்வி அமைச்சு அறிவிக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (சு-இ)




## வழக்குகளுக்கு மாற்றுத் திகதி

கொழும்பு,ஒக்.8
ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அமைந்துள்ள நீதிமன்றங்களில், வழங்குகளை விசாரிக்க மாற்றுத் திகதிகளை வழங்க நீதித்துறை ஆணைக்குழு உத்தரவு பிறப்பித்துள்ளது.



அதற்கமைவாக, ஊரடங்கு உத்தரவுகள் தளர்த்தப்பட்டதும், குறிப்பிட்ட வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-இ)

## மரக்கிளை முறிந்ததில் இளைஞன் படுகாயம்

வவுனியா, ஒக். 8
வவுனியா கண்டி வீதியிலுள்ள பேயாடிகூழாங்குளம் இராணுவ முகாமுக்கு முன்பாகவுள்ள மரம் முறிந்து வீழ்ந்ததில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்தார்.
சம்பவம் நேற்று இடம்பெற்றது. முறிந்த மரத்தை இராணுவத்தினர் அகற்றினர். (த-110)

## Fixing of Advertisement boards at the backside of newly constructed bus stand at Muneeswaran road, Jaffna

Jaffna Municipal Council is expected from interested bidders to fix the advertisement board with their own expenditure at the above mentioned location. Interested period to this project is up to three years from the date of fixing. Altogether eight (08) spaces are available to fix the advertisement boards at the particular newly constructed bus stand. The size of the advertisement board may be 15 feet x 7 feet or more, depending of the site condition. Prior approvals should have to be obtained by the successful bidder from the JMC administration before implement any site activities at the particular site. In addition to that created advertisement board should be properly maintained by the successful bidder up to the specified period.
In these connections, interested bidders are kindly requested to submit their proposal along with the annual offers to JMC through the self-prepared sealed document on or before 22.10.2020. The selection based on the amount of offer and other benefits given by the bidder to the JMC.
The terms and conditions of JMC are applicable in all steps under these selection processes.
The Chairman
Procurement Committee,
Jaffna Municipal Council,
Jaffna.
021-222 2275
06.10.2020.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
17
08
1953



உதிர்வு
22
10
2019

### பரமநாதன் தெய்வேந்திரம்

(உரிமையாளர் - தெய்வம் புடைவை மாளிகை, தெய்வேந்திரம் ஸ்ரோர்ஸ் - புதுக்குடியிருப்பு)

திதி: தேய்பிறை நவமி [11.10.2020 ஞாயிற்றுக்கிழமை]

எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று கடந்தாலும்
நித்தமும் உங்களைத் தேடுகின்றோம்
உங்கள் நினைவுகளை மீட்டுகின்றோம்
தாங்காத சோகத்தில் வாடுகின்றோம்
ஆனாலும் நீங்களோ
தெய்வமாய் எம்மோடு வாழ்கின்றீர்கள்
தெய்வமாய் எமக்கு வழிகாட்டுகின்றீர்கள்.
தெய்வமாய் எம் நினைவில் உறைகின்றீர்கள்
விண்ணுலகு சென்றாலும் எம் மனதில்
உங்கள் நினைவுகள் நிலைத்துநிற்கும்
உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எம் தெய்வத்தின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நிகழ்வு 11.10.2020 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். மேலும் பிரார்த்தனை நிகழ்வைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
077 240 5302, 021 206 1665

## சாவகச்சேரி சுகாதார பிரிவில் நாளை டெங்கு பரிசோதனை

சாவகச்சேரி, ஒக். 8
தென்மராட்சியில் கடந்த வாரம் டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்ட நான்கு கிராம அலுவலர் பிரிவுகளிலும் நாளை வெள்ளிக்கிழமை விசேட டெங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.
எனவே உக்கக்கூடிய மற்றும் உக்காத பொருள்களை பொதிகளாகக் கட்டி வைக்குமாறும் நாளைமறுதினம் சனிக்கிழமை உள்ளூராட்சி சபைகளின் உதவியுடன் கழிவுப் பொருள்கள் அப்புறப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தனர்.
மறவன்புலவு, கல்வயல், மந்துவில் மற்றும் கெற்பேலி ஆகிய பகுதிகளிலிருந்து கடந்தவாரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு டெங்கு உள்ளமை கண்டறியப்பட்டது.
இதனையடுத்து தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்று கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு மேற்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.
கூட்டத்தில் பிரதேச செயலகத்தினர், பொலிஸார், படையினர், சாவகச்சேரி நகர சபையினர், சாவகச்சேரி பிரதேச சபையினர் மற்றும் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் கலந்துகொண்டிருந்தனர்.
எனவே மேற்குறித்த பிரிவுகளின் மக்கள் தமது காணிகளில் மற்றும் குடியிருப்புகளில் பாவனைக்கு உதவாத நீர்ஏந்து பொருள்கள் காணப்படின் அவற்றை பொதி செய்து வைக்குமாறும் அறிவுறுத்தியுள்ளனர். (த9)

## மணமகள் தேவை

- யாழ் இந்து கௌரவ குடும்பம் 1985 பூரட்டாதி நட்சத்திரம் கொண்ட Diploma in Air Conditioning படித்து தொழில் புரியும் மணமகனுக்கு பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
- யாழ் இந்து கௌரவ குடும்பம் 1981 உத்தரட்டாதி நட்சத்திரம் கொண்ட Automobile Technician படித்து தற்போது தோட்டத்தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

077 783 4045

## மரண அறிவித்தல்

தோற்றம்
1953
08
10



மறைவு
2020
10
07

### திருமதி சரஸ்வதி சிவசூரியமூர்த்தி

இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சிவசூரியமூர்த்தி நேற்று (07.10.2020) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதப்பிள்ளை-சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா-தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும், சிவசூரியமூர்த்தியின் அன்பு மனைவியும் மல்லிகா, சிறிதரன், மதியழகன், அன்பழகன், ரதிமாலா, சந்திரகுமார், லைலா, பிரியா, பிரதீபா, சிந்துயா, பிரசாந் ஆகியோரின் அன்புத் தாயாரும் சகுந்தலாதேவி, கணேசலிங்கம், சிவனேசலிங்கம், சந்திராதேவி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2020) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில்.

தகவல்: குடும்பத்தினர்.
077 344 9686

## நினைவஞ்சலிகள் - 08.10.2020

கலைமகள் வீதி, தையிட்டியையும் 1990 இல் இடம்பெயர்வின் பின்னர் நவாலி வீதி, ஆனைக்கோட்டையில் வசித்து இறைவன் பொற்பாதம் அடைந்த

அமரர் வைரவி கந்தையா
11 ஆம் ஆண்டு

தோற்றம்
16.12.1929



மறைவு
14.06.2009

அமரர் கந்தையா நாகேஸ்வரி
01 ஆம் ஆண்டு

தோற்றம்
06.02.1939



மறைவு
20.09.2019

பார் போற்ற வாழ்ந்து எம்மைவிட்டு பிரிந்து
ஆண்டுகள் பல கடந்தாலும் என்றும் உங்கள்
நினைவுகளுடன் நீங்கள் வாழ்ந்து காட்டிய
அறநெறி வழிதனிலே வாழ்வோமாக.

புளியங்கண்டு வீதி,
ஆனைக்கோட்டை.

அன்புடன்
பிள்ளைகள், மருமகள்மார்,
மருமகன்மார், பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
13 . 08 . 1958

மறைவு
08 . 10 . 2019

அமரர்

### இராமலிங்கம் கணேசலிங்கம்

எங்கள் குலத்தின் குலவிளக்கு
பிள்ளைகளின் கல்விக்கு ஆசானாக
சேவைக்கு ஓர் சேவகனாக
வாழ்ந்த எங்கள் தந்தையே
இத்துன்ப பூமியை விட்டு விரைந்து
சென்று இறைவனடி சேர்ந்தீரோ!
என்றும் எங்களுடன் தோன்றாத் துணையாக
இருக்க இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம்
05 . 09 . 1994

மறைவு
06 . 10 . 2020

### கண்மணிராஜா மயூரதன்

(பழைய மாணவன் வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம் 2013 உயர்தரம்.
மாணவர் யாழ் பல்கலைக்கழகம் உயிரியல் விஞ்ஞானம் 2013/2014.
உதவி இரசாயனவியல்(தற்காலிகம்)நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை வவுனியா)

சத்திரந்தை காரைநகரைப் பிறப்பிடமாகவும் வேப்பங்குளம்.வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கண்மணிராஜா மயூரதன் நேற்று முன்தினம் (06.10.2020) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கண்மணிராஜா மற்றும் லோகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் ஜதுஷாவின்(மாணவி இராஜரட்டை பல்கலைக்கழகம் சுகாதார விருத்தி கற்கை நெறி 2015/2016) அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு சௌந்தரம் தம்பதிகள். வேலுப்பிள்ளை முத்தாச்சி தம்பதிகள் மற்றும் சோதிப்பிள்ளையின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் மற்றும் ஆனந்த சிவம்.சாரதாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மருமகனும் சண்முகராசா. கனகலிங்கம். புவனேந்திரராசா. சிவகுமார். பொன்மலர். இரத்தினவதி. தசீலா. நாகேஸ்வரி. பரமேஸ்வரி ஆகியோரின் அன்புப் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2020) வியாழக்கிழமை காலை 8.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர்.நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.22/12 G,
6ஆம் ஒழுங்கை,
வேப்பங்குளம்,
வவுனியா.

தகவல்
திருமதி கண்மணிராஜா லோகேஸ்வரி(தாய்)
செல்வி யதுஷா (தங்கை).
076 632 4914

## மரண அறிவித்தல்



### திருமதி சுகிர்தராணி ஜெயரட்ணம்

சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகிர்தராணி ஜெயரட்ணம் நேற்று (07.10.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி 2005 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான செனகரத்னம் - மல்லிகை புஷ்பம் ஆகியோரின் அன்பு மருமகளும். ஜெயரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும். லக்ஸ்மன் (கனடா) அவர்களின் அன்புத் தாயும். அனுஷி (கனடா). அவரின் அன்பு மாமியும். லலித மனோகரி (சுன்னாகம்). ஜெகதீஸ்வரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரியும். சிவானந்தசோதி (சுன்னாகம்). கோசலா (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (08.10.2020) வியாழக்கிழமை பிற்பகல் 01 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு இருளன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
செ.ஜெயரட்ணம் (கணவர்)
077 654 4419

## மரண அறிவித்தல்



தோற்றம்
02 . 07 . 1964

மறைவு
07 . 10 . 2020

### மார்க்கண்டு சந்திரசேகரன் (ராசா)

அம்மன் கோவிலடி.கொக்குவில் மேற்கு. கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் சுப்பிரமணியம் வீதி. விளக்கடி. சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சந்திரசேகரன் நேற்று (07.10.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-தங்கம்மா தம்பதியினரின் அருமை புத்திரனும் காலஞ்சென்றவர்களான இராசகிளி-பூமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் பேபிசகிலா(வேவி)இன்அன்புக் கணவரும் ராஜ்குமார் (பிரான்ஸ்) , கஜேந்திரன் (கஜன்-பிரான்ஸ்). சுரேஸ். சோபனா(யா/ஸ்கந்தவரோதய கல்லூரி மாணவி)ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் கமலாதேவி. தவராஜா. ரவீந்திரன் (ஐயா). ஜெயராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிறிஸ்காந்தராஜா(சிறி-பிரான்ஸ்) . விவேகானந்தன்(பிரான்ஸ்). விக்கினேஸ்வரன்(பிரான்ஸ்). பிறேமாவதி. சித்திரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கமியா(பிரான்ஸ்),தர்சினி(பிரான்ஸ்)ஆகியோரின் அன்பு மாமனாரும்,மேகனா,அஸ்வின் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2020) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுப்பிரமணியம்வீதி,
விளக்கடி,சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.
076 561 9624
(மகன்)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 | 07 |
| 09 | 10 |
| 1951 | 2020 |

## திருமதி தவவிநாயகம் சர்வேஸ்வரி

4ஆம் வட்டாரம் மண்கும்பானை பிறப்பிடமாகவும், 1 ஆம் வட்டாரம் வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவவிநாயகம் சர்வேஸ்வரி நேற்று (07.10.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் கமலாம்பிகை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற தியாகராசா மற்றும் செல்லம்மாவின் மருமகளும், காலஞ்சென்ற தவவிநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், நகுலேஸ்வரி (இந்தியா), காலஞ்சென்ற விநாயகமூர்த்தி சரோஜாதேவி (டென்மாரக்), சிவானந்தமூர்த்தி (வவுனியா), நிர்மலாதேவி (நவ்வி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஜெயலக்சுமி (கிளிநொச்சி), வரதலட்சுமி (கனடா), சதாலட்சுமி (மண்கும்பான்), விஜயலட்சுமி (கிளிநொச்சி), வேல்முருகன், பிரபாகரன், பத்மலட்சுமி, தயாகரன் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற ஆனந்தராசா, யமுனா, ஷவுனா, ஜெயராஜ், தவராஜ், மயூரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், அகிலேஸ்வரி, சந்திரசேகரம், மயூரதன் (பிரதேச சபை- வேலணை) வேளாயினி ஆகியோரின் அன்பு மாமியாரும், துஸ்யந்தன் (லண்டன்), துசிபன், தனுயா, அகிலன், அனுசன், மதுசன், நிதுஜா, துவாரகன், அஸ்ரின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், லக்சனின் பாசமிகு பூட்டியும் ஆவார்.,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2020) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் வேலணை இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் சாட்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



| மண்ணுலகம் | விண்ணுலகம் |
|---|---|
| 09 | 07 |
| 04 | 10 |
| 1932 | 2020 |

## திருமதி கனகரத்தினம் நகுலேஸ்வரி

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை, 47 (21,23) அரசடி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் நகுலேஸ்வரி நேற்றைய தினம் (07.10.2020) புதன்கிழமை மாலை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் தங்கச்சிமுத்து (குளப்பிட்டி) தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வீரசிங்கம் கனகரத்தினத்தின் (சொரூபி லொறி உரிமையாளர்) பாசமிகு மனைவியும், பாலசொரூபி, பாலஜெயந்தி (லண்டன்), திருக்குமார் (ஜேர்மனி), கருணாவதி, சர்வதயாளன் (பிரான்ஸ்), அரவிந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சரவணநாதன், ஏ.ஜே.புஸ்பநாதன் (லண்டன்), தயாவதி (ஜேர்மனி), தவக்குமார் (பேப்பர் ஹவுஸ்), சொர்ணவதனா (பிரான்ஸ்), வினோ (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சோதிராஜ், அமலராஜ், தர்சிகா (லண்டன்), சாம் (லண்டன்), கௌசிகன் (ஜேர்மனி), கஜனி (ஜேர்மனி), தாட்சாயினி (ஜேர்மனி), நிதன் (கனடா), றீனா (கனடா), அபினா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், நவரத்தினம், கண்மணி, இரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2020) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**47 (21,23), அரசடி வீதி,**
**தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.**
**021 222 7360, 077 918 5664**

**தகவல்: (மருமக்கள்)**
**சு.சரவணநாதன்**
**த.தவக்குமார்.**

# கொரோனா வைரஸ் தொற்றுடன் தப்பிய வயோதிபரை மடக்கிப்பிடித்தது பொலிஸ்

கொழும்பு, ஒக். 8

கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் மருத்துவமனையிலிருந்து தப்பித்துச் சென்ற வயோதிபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பு, கோட்டையில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ள அவர் மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ராகம மருத்துவமனையில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு தப்பிச்சென்ற குறித்த நபரை நேற்று மாலை மடக்கிப் பிடித்த பொலிஸார், மீண்டும் அவரை ராகம மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். பேலியகொடை பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய நபரே இவ்வாறு தப்பிச்சென்ற நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். (ம-22)

# வெலிசறை ஆடைத் தொழிற்சாலைக்குள்ளும் புகுந்தது கொரோனா: ஊழியர் ஒருவர் பாதிப்பு

கொழும்பு, ஒக். 8

வெலிசறையிலுள்ள பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளார். மினுவாங்கொடை பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வெலிசறையிலுள்ள பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் நேற்று முதல் கட்டமாக 93 ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ம-22)

**தேவை**
* மில் வேலை கூலி ஆட்கள்
* பொதி செய்பவர்கள் தேவை
**தொடர்பு: 077 772 2215**

**விற்பனை முகவர்கள் தேவை**
கொடிகாமத்தில் இயங்கும்
எமது கிளை நிறுவனத்தில் பணிபுரிய
விற்பனை முகவர்கள்
தேவை. அடிப்படைச் சம்பளம் மாதாந்தம்
ரூபா 15,000.00
தொடர்பு. 077 719 8380
**சுஜித் என்ரபிறைசஸ்**
பருத்தித்துறை வீதி, கொடிகாமம்
( கொமஷல் வங்கி அருகில்)

# மருத்துவருக்கும் கொரோனா உறுதி

கொழும்பு, ஒக். 8

கம்பஹா மாவட்ட பொது மருத்துவமனையில் கடமையாற்றிய மருத்துவர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையைச் சேர்ந்த ஒரு குழுவினருக்கு தனது தனியார் மருத்துவமனையில் இந்த மருத்துவர் சிகிச்சை அளித்துள்ளார் என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அவர் கொழும்பு தேசிய தொற்று நோயியல் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (த-22)

**பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் பிற்போடல்**

எதிர்வரும் (10 .10. 2020) சனிக்கிழமை நடைபெறவிருந்த பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் தற்போதைய COVID-19 சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. மீள நடைபெறும் திகதி பின்னர் அறியத் தரப்படும்.

அதிபர்
யா/ ஹாட்லிக்கல்லூரி

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 | 07 |
| 10 | 10 |
| 1948 | 2020 |

## றொபேட்ஸ் சபாரெத்தினம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் 77/5A ஆனந்தன்வடலி வீதி 4ஆம் ஒழுங்கை கொழும்புத்துறை யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட றொபேட்ஸ் சபாரெத்தினம் நேற்று (07.10.2020) கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற ரூபி செல்வமலரின் அன்புக் கணவரும் ரூபேஷ் ஜெயக்குமார் (வளிமண்டலவியல் திணைக்களம்-யாழ்ப்பாணம்), முரளீதரன் தயாரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், மிகாயா தர்ஷாயினி (ஆசிரியர்-பாஷையூர் சென் அன்ரனீஸ் பாடசாலை), கணேசன் முரளீதரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜோயல் றொஷான், ஷெறீன் ஜோகான்னா, லின்ஷியா ஆகியோரின் பாசமிகு பேரனும், றொபேட்ஸ் ரட்ணராஜா, ஜெபநேசன் அலிஸ் மலர், மனோகரன் றோஸ், காலஞ்சென்றவர்களான கிறேஸ், Sister லில்லி றைஸ் (CPM) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (08.10.2020) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோப்பாய் இராச வீதியில் அமைந்திருக்கும் கானான் திருச்சபை சேமக்காலைக்கு கொண்டுசெல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**T.P: 077 854 4593**

தகவல்:
குடும்பத்தினர்.

## மூன்றாம் ....

தலானது. கடந்த காலங்களில் இலங்கையில் ஏற்பட்ட கொரோனாத் தொற்றிலிருந்து இது மாறுபடுகின்றது. எனவே இந்த விடயத்தில் அதிகூடிய கவனமும் எச்சரிக்கையும் தேவை. இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்றுக் கருத்து வெளியிட்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்ததாவது:

இலங்கையில் நாளாந்தம் 3 ஆயிரத்து 500 பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெறுகின்றன என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படவேண்டும்.

அதேபோல ஒரு நாளில் 2 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகளும், அதற்கு அடுத்த நாள் 2 ஆயிரத்து 500 பி.சி.ஆர். பரிசோதனைகளும் என்று இடம்பெறுமானால் அதனை ஏற்றுக்கொள்ளமுடியாது. எல்லா நாளும் ஒரே அளவில் இடம்பெறவேண்டும். நாளொன்றுக்கான உச்ச பரிசோதனை எண்ணிக்கை 3 ஆயிரத்து 500 என்றால் அதனை தக்கவைத்துக் கொள்ளவேண்டும் என்பதுடன் 4 ஆயிரம் என்ற கட்டத்துக்கு செல்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

கடந்த காலங்களில் எவருக்காவது சமூகத்திலிருந்து கொரோனாத் தொற்று பரவினால் அது எவ்வாறு பரவியது என்ற மூலத்தைக் கண்டறியக்கூடியதாக இருந்தது. ஆனால் கம்பஹா பெண்ணுக்கு எவ்வாறு வைரஸ் பரவியது என்பதை இன்னும் கண்டறியமுடியாமல் இருப்பது மிகவும் பாரதூரமான விடயமாகும். சமூகத்தில் வைரஸ் தொற்று இருந்ததா என்ற சந்தேகமும் எழுகின்றது.

அரச மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துடன் நாம் தொடர்பு கொண்டிருந்தோம். தற்போது அடையாளம் காணப்படும் தொற்றாளர்களின் உடலில் உள்ள வைரஸின் அளவு அதிகளவில் காணப்படுகின்றது. இலங்கையில் இதுவரையில் இருந்த வைரஸின் தன்மை மாறியுள்ளதா என்ற சந்தேகமும் எழுகின்றது. ஆகவே, இதனை உரிய வகையில் கட்டுப்படுத்தவேண்டும்.

வெலிசறை கடற்படை மற்றும் கந்தக்காடு ஆகிய கொத்தணிப் பரவல்களைவிடவும் தற்போதைய நிலைமை அச்சுறுத்தலானது. ஆகவே, தற்போதைய சூழ்நிலையை உரியவகையில் முகாமை செய்து கட்டுக்குள் கொண்டுவரவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் பெரும் பின்னடைவுகளைச் சந்திக்கநேரிடும் என்றார். (ம-ஒ.5,44)

## கோப்பாய் ....

ரிய பொலிஸ் விடுதியில் அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கம்பஹாவைச் சேர்ந்த இவர் விடுமுறையில் தனது சொந்த இடத்துக்குச் சென்றுள்ளார். பொலிஸாரின் விடுமுறைகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டிருந்த நிலையில் அவர் நேற்றுமுன்தினம் கம்பஹாவில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பியிருந்தார்.

இந்த விடயம் சுகாதாரப் பிரிவினரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, பொறுப்பதிகாரியைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை கோப்பாய் பிரதேச மருத்துவ அதிகாரி மேற்கொண்டார். (ம-எ26)

## 17 பொலிஸ் ....

பொலிஸ் எல்லைப் பகுதிக்குள்ளும் மறு அறிவித்தல் வரையில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரச தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் மறுஅறிவித்தல் வரையில் கீழ் கண்ட 17 பொலிஸ் எல்லை பகுதிக்குள் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**கம்பஹா பொலிஸ் பிரிவு**

கம்பஹா, கணேமுல்ல, கிரிந்திவெல, மல்வத்து ஹிரிபிட்டிய, மீரிகம, நிட்டம்புவ, பூகொடை, வேயாங்கொடை, வீரகுல, வெலிவேரிய, யக்கல, தொம்பே, மினுவங்கொடை, பல்லேவெல பொலிஸ் எல்லைப் பகுதிக்குள்.

**களனி பொலிஸ் பிரிவு**

ஜா - எல, கந்தான பொலிஸ் எல்லைப் பகுதிக்குள்.

**நீர் கொழும்பு பொலிஸ் பிரிவு**

திவுலப்பிட்டிய பொலிஸ் எல்லைப் பகுதிக்குள். (ம-ஒ.இ)

## பரீட்சைகள் ....

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கம்பஹா மாவட்டத்தில் பரீட்சை எழுதும் மாணவர்கள் குறித்து அதிககவனம் செலுத்தப்படும். பரீட்சை நிலையங்கள் மிகக் கவனமாகக் கண்காணிக்கப்படும். அத்துடன், கம்பஹா மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பரீட்சை எழுதச் செல்லும் மாணவர்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும்.

வெளி மாவட்டங்களில் இருந்து கம்பஹா மாவட்டத்துக்குப் பரீட்சை எழுத வரும் மாணவர்கள் குறித்தும் கவனம் செலுத்தப்படும். அத்துடன், பரீட்சை நிலையங்கள் மிகக் கவனமாகத் தூய்மைப்படுத்தப்படும். தனிமைப்படுத்தப்பட்டுள்ள மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்கும் ஏற்பாடுகள் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார்.

எதிர்வரும் 11ஆம் திகதி தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதேவேளை, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 6ஆம் திகதி நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-ஒ.5,22)

## தனியார் ....

செயலர் இ.இளங்கோவன் பணித்துள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வடக்கு ஆளுநரின் பணிப்புக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று செயலர் செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். (ம-த)

## கூட்டமைப்பின் ....

பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று மதியம் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கூடியது. சுமார் ஒரு மணி நேரம் இந்தக் கூட்டம் நீடித்தது. ஜெனிவா விவகாரம் தொடர்பில் ஆரம்பத்தில் ஆராயப்பட்டது. அதன் பின்னர் கூட்டமைப்பின் பேச்சாளர் விவகாரம் எடுக்கப்பட்டது.

கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்த சுமந்திரன், தான் இனி அந்தப் பதவியில் தொடரப் போவதில்லை என்றும் அதிலிருந்து விலகுவதாகவும் அறிவித்ததுடன், புதிய பேச்சாளராக சி.சிறிதரனின் பெயரை முன்மொழிந்தார். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் செல்வம் அடைக்கலநாதனின் பெயரை முன்மொழிந்தார். இதன் பின்னர் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி ஒரு அணியாகவும், புளொட், ரெலோ ஒரு அணியாகவும் நின்று வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டன.

இரு தரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் மாறிமாறி குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினர். ஒரு கட்டத்தில் பொறுமையிழந்த இரா.சம்பந்தன், ஒற்றுமையைக் கருதி ஒரு யோசனையை முன்வைப்பதாகத் தெரிவித்தார். சி.சிறிதரன் தற்போதுள்ள கொறடா பதவியிலேயே தொடரட்டும். பேச்சாளராக கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணங்கியதற்கு அமைவாக செல்வத்தை நியமிக்கலாம் என்று கூறினார். சம்பந்தனின் இந்தக் கருத்தை சுமந்திரன், சிறிதரன், சாள்ஸ் மறுதலித்தனர்.

பேச்சாளர் பதவிக்கு வாக்கெடுப்புக்குச் செல்லும் நிலைமையும் தோன்றியது. இருப்பினும், சம்பந்தன் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தை முடித்து வைத்தார். இதனால் சுமந்திரன் பதவி விலகிய நிலையில் வெற்றிடமான பேச்சாளர் பதவிக்கு புதிதாக எவரும் நியமிக்கப்படவில்லை. (ம-ஒ.5)

## மகளுக்கு...

மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்த குறித்த பெண்ணின் மகள் ஏற்கனவே கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதையடுத்தே குறித்த தாயார் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவர் நேற்று மாலை திடீரென உயிரிழந்துள்ளார்.

மகளுக்குக் கொரோனாத் தொற்று இருப்பதால் உயிரிழந்துள்ள தாயாருக்கும் கொரோனாத் தொற்று இருந்திருக்கலாம் என்று மருத்துவர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். அவரின் மாதிரி பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. (ம-22)

## கொழும்பு...

டுள்ளது. இதனால் நேற்றுக் கொழும்பில் பரபரப்பு நிலவியது.

மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்த குறித்த மாணவனின் தாயார் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டதையடுத்து தாயாரும் அவரது குடும்பத்தினரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மாணவனிடம் மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. சிலவேளைகளில் மாணவனுக்குக் கொரோனாத் தொற்று என்று பரிசோதனையில் தெரியவந்தால் நிலைமை தீவிரமாகும் என்பதால் கொழும்பில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (ம-22)

## வன்னி மக்களின்...

சாள்ஸ் நிர்மலநாதன், கடந்த அரசில் வீடமைப்புத்துறை அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாஸவினால் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் திட்டமிடாத வகையில் முன்னெடுக்கப்பட்ட 6 ஆயிரத்து 682 வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் இடை நடுவில் கைவிடப்பட்டுள்ளதாலும், நிதி வழங்கப்படாததாலும் அந்தக் குடும்பங்கள் நடு வீதியில் அநாதரவாக நிற்கின்றமை தொடர்பிலும், கடந்த அரசு ஒதுக்கிய நிதியிலும் பார்க்க தற்போது நிதி குறைக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும், பட்டதாரி நியமனங்களில் இந்தியப் பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் கேள்விகளை எழுப்பினார்.

இதில் ஒரு கேள்விக்கு மட்டுமே பிரதமர் பதில் வழங்கியதுடன் மற்றையவை தொடர்புபடாத கேள்விகள் எனக் கூறினார்.

இதன்போதே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, 'பிரதமரிடம் கேள்விகளைக் கேட்கும்போது சில்லறைத்தனமான கேள்விகளைக் கேட்டு பிரதமரின் நேரத்தை வீணடிக்கக்கூடாது. இதனை சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. கவனத்தில்கொள்ள வேண்டும்' என்றார்.

இதையடுத்து உடனடியாக எழுந்த சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி, "சபா நாயகரே நான் இங்கு சில்லறைத்தனமான கேள்வியை எழுப்பவில்லை. வன்னி மாவட்டத்திலுள்ள 6 ஆயிரத்து 682 குடும்பங்களின் பிரச்சினைகளைத்தான் கேட்கிறேன். இது எப்படி உங்களுக்குச் சில்லறைப் பிரச்சினை யாகும்?' எனக் கேட்டபோது மீண்டும் சபாநாயகர், 'பிரதமரிடம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கேள்விகளையே கேட்க வேண்டும்' என்றார்.

ஆனால், சாள்ஸ் நிர்மலநாதனுக்கு முதல் பிரதமரிடத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன கஞ்சா தொடர்பில் கேள்வி கேட்டிருந்ததுடன் அதற்குப் பிரதமரும் பதிலளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)

## கொரோனா....

தொற்றாளர்கள் அனைவரும் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதேவேளை, தொற்றாளர்களின் உறவினர்கள் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கும் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இன்றும் அனேகமான பி.சி.ஆர் முடிவுகள் வெளிவரவுள்ளன. இதனால் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

'மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலையின் அபாயகரமான நிலைமையை விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு நாம் முழுமூச்சுடன் செயற்பட்டு வருகின்றோம்' என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார். (ம-22)

### சிறுவர் துஷ்பிரயோகம்

# ஒன்பது மாதங்களில் 6,063 முறைப்பாடுகள்

## கல்வி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தகவல்

**கொழும்பு, ஒக். 8**

**சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில், இவ்வாண்டில் 6 ஆயிரத்து 63 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரியவால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே, கல்வி அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு 2020 ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் இவ்வாறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

6 ஆயிரத்து 63 முறைப்பாடுகளில், 3 ஆயிரத்து 900 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் நிறைவு பெற்றுள்ளன. இவற்றில் 330 முறைப்பாடுகள் தொடர்பில் குற்றப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.



முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்தவதற்காக பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் கல்வி அமைச்சர் தெரிவித்தார். (க-44)

# ரிஷாத் விடுதலை அரசுக்கே அவமானம்

## சட்டத்தரணி பிரேமநாத் சுட்டிக்காட்டு

கொழும்பு,ஒக். 8

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக கைது செய்யப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதீனின் சகோதரர் ரியாட்டை விடுதலை செய்தமை, பொலிஸார் தமக்கு புள்ளிகளைப் போட்டுக்கொள்வதற்கே.

இது அரசை அசௌகரியத்துக்கு உள்ளாக்கிய சம்பவமாகும்.

இந்த விடயத்தில் பொலிஸார் கைகளைச் சுட்டுக் கொள்ளாமல் இருந்தால் மிகவும் நல்லது.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான சட்டத்தரணி பிரேமநாத் சீ. தொலவத்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இப்படியான விடயங்களால் அரசுக்கு அவப்பெயர் ஏற்படும். அரசு ரிஷாத் பதியூதீனுடன் சிறிய உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

சாட்சியம் இல்லை எனக் கூறி பொலிஸார் விடுதலை செய்துள்ளனர். சாட்சியம் இல்லை என்று எவ்வாறு பொலிஸார் தீர்மானிக்க முடியும்.

சாதாரண மக்கள் தொடர்பாக பொலிஸார் இப்படித் தீர்மானிப்பார்களா? பொலிஸாரின் இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கின்றேன். -என்றார் (க-இ)

# நேரடித் தொடர்பில்லை அதனாலேயே விடுதலை

## அமைச்சர் சமல் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.8

தீவிரவாத்துடன் நேரடியான தொடர்புகள் இல்லாத காரணத்தினாலேயே, நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின், சகோதரர் ரியாட் பதியுதீன் விடுதலை செய்யப்பட்டார் என்று அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த, ரியாட் பதியுதீன், 5 மாதங்களின் பின்னர் கடந்த மாதம் 29 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டார்.

நாடாளுமன்றத்தில் ரியாட் பதியுதீனின் விடுதலை தொடர்பில், கேள்வி எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, பொலிஸார் வழங்கியுள்ள அறிக்கை முரணானதாகக் காணப்படுகின்றது எனத் தெரிவித்து அதற்கு விளக்கம் கோரினார்.

இதற்குப் பதிலளித்த சமல் ராஜபக்ஷ முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் சகோதரருக்கு பயங்கரவாதிகளுடன் எந்தத் தொடர்பும் இல்லை என விசாரணைகளின் முடிவில் உறுதியான பின்னரே, அவர் விடுதலை செய்யப்பட்டார்.

எனினும் அவருக்கு எதிரான விசாரணைகள் பூர்த்தியாகவில்லை. புதிய ஆதாரங்கள் கிடைத்தால் நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார். (க-இ)

# வியாழேந்திரனுக்கு புதிய அமைச்சுப்பதவி



கொழும்பு,ஒக்.8

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனுக்கு புதிய அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக பின்தங்கிய கிராமப்புற அபிவிருத்தி, உள்நாட்டு விலங்கு வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ முன்னிலையில் அவர் நேற்று முன்தினம் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நிகழ்வு இடம்பெற்றது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (க-150)

# ரிஷாத்தை புகழ்வதற்கான அவசியம் எனக்கில்லை

## கமால் குணரத்ன ஆதங்கம்

கொழும்பு,ஒக் 8



முன்னாள் அமைச்சரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தொடர்பாக, பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்ததாக வெளிவந்துள்ள கருத்துக்களை அவர் முழுமையாக நிராகரித்துள்ளார்.

ரிஷாத் புகழ்பாட எனக்கு எந்த அவசியமும் இல்லை. திரிபுபடுத்தப்பட்ட செய்தியே வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனது பெயருக்குக் களங்கம் ஏற்படும் விதமாக செய்தி வெளியிடப் பட்டுள்ளது.

வவுனியாவில் அரச நிகழ்வில் நான் கலந்து கொண்டபோது ஆற்றிய உரையை மையமாகக் கொண்டே பொய்யான செய்தியொன்று பரப்பப் பட்டு வருகின்றது.

முன்னர் வன்னியில் நாம் கடமையாற்றிய நேரத்தில் மீள்குடியேற்ற அமைச்சராக ரிஷாத் பதியுதீன் செயற்பட்டார் என்ற ஓர் வார்த்தையை மட்டுமே நான் கூறினேன். ஆனால் அந்த நிகழ்வில் திருமதி சார்ள்ஸ் தொடர்பில் நான் அதிகமாக பேசினேன். அவர் எமக்காக பல தியாகங்களைச் செய்தார், எனக்கு அதிகளவில் உதவிகளையும் செய்துள்ளார். நல்ல மரியாதையும், மதிப்பும் கொண்ட நபர் என்ற விதத்தில் அவர் தொடர்பில் அதிகம் பேசினேன்.

இந்த நாட்டில் ஊடக சுதந்திரம் உள்ளது. ஊடகங்களுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்க எவரும் நினைக்கவில்லை. எனது உரையை முழுமையாக ஊடகங்களில் பிரசுரிக்க வேண்டும் என்ற கட்டாயமும் ஊடகங்களுக்கு இல்லை, அதனை நான் நன்கு அறிவேன். ஆனால் நான் கூறிய விடயங்களை திரிபுபடுத்தி என்னை நெருக்கடிக்குள் தள்ள நினைப்பது, ஊடக தர்மமாக இருக்காது. அவ்வாறு நடந்து கொள்வது கீழ்த்தரமான செயற்பாடாக இருக்கும் என்ற நான் நினைக்கின்றேன்.- என்றார். (க-இ)

# பொருளாதாரப் படுகொலைக்கு முகம் கொடுத்துவரும் நாடு

## மங்கள சமரவீர கவலை

கொழும்பு,ஒக்.8



நாட்டின் பொருளாதாரத்தை சீரான நிலையில் பேணுவதற்காக, பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் கூட மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர்கள் தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயலாற்றி வந்தனர்.

எனினும் தற்போது எமது நாடு மோசமானதொரு 'பொருளாதாரப் படுகொலைக்கு' முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

ஓய்வுபெற்ற மத்திய வங்கியின் முன்னாள் சிரேஷ்ட பிரதி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தொடர்பான பதிவொன்றை மேற்கோள் காட்டி, தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

ஓய்வு பெற்றுச் செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டமை உள்ளடங்கலாக, பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் கூட, இலங்கை மத்திய வங்கியின் இரு சிரேஷ்ட பிரதி ஆளுநர்கள் பல வருட காலமாகக் கடமையாற்றினர்.

நாட்டின் பொருளாதாரத்தை சீரான நிலையில் பேணுவதற்கு செயற்திறனான வகையில் அவர்கள் தொடர்ச்சியாக உதவி வந்தனர் எனவும் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (க-இ)

# மிகப்பெரும் எழுச்சிக்கு பின்னர் சரிவுகண்டு வீழ்ந்தது சென்னை

அபுதாபி, ஒக். 8

ஐ.பி.எல் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸிடம் வீழ்ந்தது சென்னை சுப்பர் கிங்ஸ்.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப இணையில் இருந்து நரைன் நீக்கப்பட்டார். திரிபாதி, கில் இருவரும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர். 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கில். இதற்காக அவர் 12 பந்துகளை எடுத்துக் கொண்டார். மூன்றாம் நிலை வீரராக ரணா 10 பந்துகளை எதிர்கொண்டு 9 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். மறுமுனையில் அடித்தாடிக் கொண்டிருந்தார் திரிபதி. நரைன் அதிரடிகாட்ட எத்தனித்தார். 17 ஓட்டங்களை நரைன் பெற்றிருந்த நிலையில் உறையவைக்கும் பிடியெடுப்பின்மூலம் அவரை பவிலியனுக்கு அனுப்பினார் ஜடேயா.

மத்திய வரிசையில் கொல்கத்தாவின் பெரும் பலமான ரசல், மோர்கன் இருவராலும் நேற்றுப் பிரகாசிக்க முடியவில்லை. 7 ஓட்டங்களுடன் மோர்கனும், 2 ஓட்டங்களுடன் ரசலும் ஆட்டமிழந்தனர். 81 ஓட்டங்களுடன் திரிபதியும் வீழ்த்தப்பட்டார். 167 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது கொல்கத்தா.



பந்துவீச்சில் பிராவோ 3 இலக்குகளையும், சாம் கரன், தாக்கூர், கரண் சர்மா மூவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய சென்னை அணிக்கு ஆரம்ப வீரர்களாக வற்சன், டுபிளஸி. அணி 30 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் டுபிளஸி. மறுமுனையில் வற்சன் அதிரடிகாட்ட அவருடன் இணைந்தார் ராயிடு. இணைப்பாட்டம் நீண்டு நிலைத்தது. இணைப்பாட்டமாக 50 ஓட்டங்கள் பகிரப்பட்டது. அணி 99 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ராயிடு. எதிர்பாராத விதமாக முன்வரிசையில் களமிறங்கினார் டோனி. அரைச்சதம் கடந்தார் வற்சன். அரைச்சதத்தை விட்டு அவர் நகரவில்லை. 50 ஓட்டங்களுடன் நரைனின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யு ஆனார். வற்சன் ஆட்டமிழந்த பின்னர் சி.எஸ்.கேயின் கரங்களுக்குள் இருந்த ஆட்டம் படிப்படியாக விலகியது.

அணித் தலைவர் டோனி 12 பந்துகளை எதிர்கொண்டு வெறும் 11 ஓட்டங்களை மட்டுமேபெற்று அணியை நெருக்கடிக்குள் தள்ளினார்.

இறுதி 3 பந்துப்பரிமாற்றங்களில் 39 ஓட்டங்கள் தேவை என்ன நிலை. ஒருமுனையில் சாம் கரன் மறுமுனையில் கேதர் யாதவ். 18ஆவது பந்துப்பரிமாற்றத்தில் கரனை இழந்து 3 ஓட்டங்களை மட்டுமே பெற்றது சி.எஸ்.கே. ரசலின் இந்தப் பந்துப்பரிமாற்றத்துடன் கொல்கத்தாவின் கரம் ஓங்கியது. வழக்கம்போல டெஸ்ட் ஆட்டத்தை முன்னெடுத்தார் கேதர் யாதவ். இறுதிப் பநதுப்பரிமாற்றத்தில் 26 ஓட்டங்கள் தேவை என்ற நிலை. 157 ஓட்டங்களையே சென்னையால் பெறமுடிந்தது. முடிவில் 10 ஓட்டங்களால் தோல்வியடைந்தது சென்னை சுப்பர் கிங்ஸ். 12 பந்துகளில் 7 ஓட்டங்களையே யாதவால் பெறமுடிந்தது. பிராவோ போன்ற வீரர் வெளியில் இருக்கையில் கேதர் யாதவை களமிறக்கி தோல்வியடைவதென்பது தன் தலையில் தானே மண்போடும் செயலேயன்றி வேறல்ல. (ம)




## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பொக்கன் வீதியில் 6 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு (பிரித்துக் கொடுக்கப்படும் 1 1/2 பரப்புக்காணிகளாக) ஒரு பரப்பு காணியின் விலை முன் பகுதி 6 லட்சம். பின் பகுதி 5 லட்சம். (காணி இராசவீதியில் தேசியகல்வியல் கல்லூரிக்கு முன்பாக உள்ளது.)

தரகர் தேவையில்லை, நேரில் வரவும் (மதியம் 12.30 பின்னர் தொடர்பு கொள்ளவும்)

குரு:

0774683354, 0762212037


## வீட்டுப் பணிப்பெண் தேவை

கோண்டாவில் பகுதியில்
அரச வேலை செய்யும்
தம்பதியினரின் வீட்டில் வேலை
செய்வதற்கு வீட்டுப்பணிப்பெண்
தேவை. நாள்சம்பளம் 850 ரூபா
(பேசித்தீர்மானிக்க முடியும்)

074 037 2719


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
14 . 07 . 1940



மறைவு
06 . 10 . 2020

### அப்பாதுரை சபாரட்ணம்

(முன்னாள் பணியாளர் - 52 வருடங்கள்)

தன்நம்பிக்கை தந்த நீங்கள் எங்களுடன் இல்லை
நீங்கள் விதைத்த வித்துக்காளாய்...
உங்கள் நினைவுடன் என்றென்றும்..
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்
44,42, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
உரிமையாளர், ஊழியர்கள்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.